-521-

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 16	குரோதி ஸ்ரீ மாசி மீ	வருட சந்தா
இதழ் : 11	பிப்ரவரி—மார்ச்சு மீ 1965	ரூ. 3-00.

Page -521-

அறுவர்க்கு அட்டமாசித்தி உபதேசித்தல்
சித்திர விளக்கம் 34] [பக்கம் 486

ACC. NO. 9886

பொருள் அடக்கம்

பக்கம்

1. உள்ளமாம் துறைமுகத்தில் துளளி விளையாடும் துரையே வா! (திருப்புகழ்மணி) ... 481
2. அட்டமாசித்தி உபதேசித்தது (கி. வா. ஜகந்நாதன்) ... 486
3. 'ஆறுதஞானபுறதி' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) 489
4. சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் கதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 500
5. அருணகிரிநாத சுவாமிகள் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 504
6. முருகன் நடித்த நாடகம் (கி. வா. ஜ.) ... 508
7. கடன்காரர்கள் (ரஸபதி) ... 517
8. Greatness (*Thir' ppugal Mani*) .. 527

Grams: MURSOKS. Phone: 6'388

" கோணகவே வரு நாத, குருபர, குமரேசா!
சீராகவே கலையால் உனை ஓதவும் அருள்தாராய்!

வெண்மையான சலவைக்கு
ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D பங்காரு செட்டியார்,
நேஷனல் இண்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ மாசி மீ பிப்ரவரி — மார்ச் 1965	இதழ் 11

உள்ளமாம் துறைமுகத்தில்
துள்ளி விளையாடும் துரையே! வா.

(திருப்புகழ்மணி)

ஐங்கர மூர்த்தியாகிய விநாயகப் பெருமானை உள்ளத்தில் வைத்தால், அவர் அடங்காத ஐம்புலன்களை அடக்கி விடுவார். அப்பொழுது உள்ளத்தில் நாத னாகிய முருகன் பேசுவது தெரியும்.

அண்டர்களாகிய ஜீவராசிகளைப் பஞ்சேந்திரியங் களாகி அசுரர்கள் வசப்படுத்திக் கொண்டு துன் பத்திலிழுத்துத் தள்ளுகின்றனர். அண்டர்களாகிய ஜீவராசிகள் துன்பங்களுக் காற்றாமல், பரமசிவ னிடத்தில் முறையிடும் பொழுது, அவர் அவர்களுக்கு அபயமளித்து, எனது தவத்தின் வடிவமும், ஜோதி

ஆளும் குறிப்பு அமைந்திருக்கும் காரணத்தால்,
ஆளென்(று) ஒருநாமம், ஆடவர்க்கு ஆயதுவே.

மயமுமான முருகன் உங்களுள்ளத்தில் உதிப்பான். அப்பொழுது உங்களிடர் நீங்கும் என்றார்.

சிவத்தின் தவச்சுடரே முருகன். அக்கினி சுவரூபமான சிவனுக்குக் கருணை சுடர்விட்டுப் பிரகாசித்தது. அச்சுடரே ஆறு பிரிவாய்ப் பிரிந்து சரவணப் பொய்கையில் சேர்க்கப் பட்டது. கருணை சமுத்திரமான ஜெகன்மாதாவின் சுவரூபமான சரவணப் பொய்கையை அச்சுடர்கள் சேர்ந்தவுடன் ஆறுமுக வடிவத்துடன் வெளிப்பட்டன.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரம்மமாய் நின்றஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பனிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்று முருகன் அவதார தத்துவத்தைக் கூறியுள்ளார் கச்சியப்ப சிவாச்சாரியர்.

எல்லா தீர்த்தங்களும் சரவணத்தில் அடக்கம் என்றார் கவிகுஞ்சர பாரதியார். சுத்தமான ஜலமே தீர்த்தம் எனப்படுகிறது. ஜலம் நாராயண சுவரூபம். நாராயணன் ஜெகன்மாதாவின் ஸ்வரூபம். ஜெகன் மாதாவே சரவணப் பொய்கை. முருகன் ஜெகன் மாதாவின் மடியில் விளையாடுவதே சரவணப் பொய்கையில விளையாடுவது. அவ்வாறு விளையாடிய முருகன் தன்னை நினைக்கும் அனபர்களின் உள்ளமாகிய துறைமுகத்திலேறி விளையாடுகிறானும். முருகன் இதயத்தில் வந்தவுடன் சூரபதுமாதியரைக் கொன்றுவிட்டான்.

மானம் மரியாதை மரபு தனைக்காத்து,
ஞானம் பெருகும் நலமுணர்ந்து கொள்வோமே.

முருகன் உள்ளே வந்தால் பகைவராகிய அசுரர்கள் தொலைந்து விடுவார்கள். நம்பிக்கையே மனிதனுடைய ரூபம். பகவானுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டு வந்தால் பகவான் உள்ளே புகுந்து தன்னுடைய ரூபத்தை அவனுக்குத் தந்து விடுவான்.

இன்பமும் துன்பமும் கலந்து கட்டிய கட்டிடமே சரீரம். ஆதலால், இதை நம்ப வேண்டாம் என்றார் அருணகிரியார். இதை ஒழிக்கவும் கூடாது. முருகனுக்கு அர்ப்பணம் செய்து விடவேண்டும்.

மாயையாகிய இருளையே, கிரௌஞ்சமலை யமனென்று சொல்லுகிறது புராணம். முருகனாகிய ஒளியை உள்ளத்தி லேற்றிய உடன் அவ்விருள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. வெளிச்சத்தைச் சுற்றி யிருட்டும உண்டு. இருளில் போய்விழாமல் வெளிச்சத்தில போய் உய்யவேண்டும். இருளாகிய கிரௌஞ்ச மலையைப் பொடியாக்கிய வேலனுக்கு உடலையும், உயிரையும் அர்ப்பணம் செய்தால், அது கந்தலோகத்தில் பேசுவதற்கேற்ற டெலிபோனாய் விடும். ஆதலால், இந்த யாக்கையை முருகனுடையதென்று நினைத்துக் காப்பாற்ற வேண்டும். முருகனுக்காக்கி விட்டால் இருளாட்சியாகிய விதி மறைந்து உலக முழுவதும் ஆளக் கூடிய கதி வந்துவிடும். "சரவணபவா" என்ற ஆறு அக்ஷரங்களை நாவில் எழுதிவிட்டால் யமன் போய் விடுவான்.

உள்ளத்தில் மெய்ச்செல்வம் உள்ள(து;) அதை ஓர்பவர்கள்,
கள்ள(ம்)அகல் கின்றார், களிகினறார் காணீரே.

சரவணபவா என்னும் வாக்கு, பதினாலுலகங்களிலும் செல்லக் கூடிய செல்வாக்கைத் தந்துவிடும். ஆறெழுத்தைச் சொல்லி திருநீற்றைப் பூசினால் முருகன் ஓடிவந்து நமக்கருள் புரிவான். ஆதலால், யாக்கையை முருகனுக்காக்கு. சரவணபவாவென்னும் ஆறு எழுத்துக்களைச் சொல்லித் திருநீறு பூசு. அப்பொழுது உன் உடம்பு மயில் வாகனர் வீட்டாகிவிடும். யமன் ஓடி விடுவான். ஆண்டவனைப்பற்றிப் பேசுமிடத்தில் பிசாசு ஓடிவிடும். விடாமல் நினைப்பவருடைய புத்தியில் வந்து கலந்து அதில் நடனமாடுகிறான் முருகன். முருகனுடைய நாமத்தால் புத்தி விசாலமானவர் வேதியர். அவருடைய செல்வம் முருகனே. வில்பிடித்த வேடககாரன் முருகன். முருகனைப் பாடினால் இராமன் வருவான். இராமனைப் பாடினால் முருகன் வருவான. இருவரும் ஒருவரே.

"வேடுவர் புனத்தில் உருமாறி முனிசொல்படி வியாகுல மனத்தினொடு போம் வில்காரன்" என்றார் முருகனை அருணகிரியார். சீதையைப் பிரிந்த துயரத்தினால் தன் உருமாறி வில்காரனாய் வியாகுல மனத்தினோடு சென்றவன் இராமன்.

நாரதமுனி வள்ளியைப்பற்றிச் சொன்னார். அவர் சொல்படி தன் உருமாறி வில்காரனாய்ச் சென்றான் முருகன். வசிஷ்ட முனியின் சொற்படி உருமாறிச் சக்தியாகிய சீதையை மட்டும் அழைத்துக

முயல்வார்க்கு முத்திநலம் முனனிற்கும்; என்றும்
அயர்வார் அறியார், அவனியுறு கின்றாரே.

கொண்டு விபூதிபூசி ஜடாதாரியாய்ச் சிவ ரூபத்துடன் போனான் இராமன்.

முருகாவென்று சொல்லிக் கொண்டு முருகனைப் பிரிந்த தாபத்தினால் தினைப்புனத்தில் வாடிய வள்ளியை நோக்கி ஓடினானும் முருகன். இராமனைப் பிரிந்த தாபத்தினால் ராம் ராம் என்று சொல்லிக் கொண்டு அசோக வனத்தில் வாடிக் கொண்டிருந்த சீதையைத் தேடிக்கொண்டு வியாகுல மனத்தோடு போனான் இராமன். இராமனும் முருகனும் வெவ்வேறல்லர். இருவரும் ஒருவரே.

பரதேவதையின் கருணை வடிவே முருகனும் இராமனும். தொண்டர்களுக்கு வரும் கஷ்டத்தை நீக்கி இன்பம் தருவதற்காக முருகன் உலகை வலம் வந்தான். இராமன் வனம் சென்றான். நாம் சுகப்படவே முருகன் தவம் செய்கிறான். ஆணவமெனும் மலைக்கும் வேற்றுமையாகிய சமுசாரமென்னும் கடலுக்கும் இடையில் அகப்பட்டுத் தவிக்கும் ஜீவர்களைக் காக்க செந்தூர்க் கடற்கரையில் நின்றிருக்கிறான். ஆணவ மலையைப் பிளந்து, சமுசாரக் கடலை வற்றடிக்கிறான். தொண்டர்களே தேவேந்திரர்கள். அவர்களுடைய சிந்தையே செந்தூர். சிந்தையாம் செந்தூர் வாழ் முருகனைப் போற்றுவோம்.

புனித உளமுளதேல், பொன்னுகும் வாழ்க்கை;
இனிய அதையுணரா ஏழையர்கள் கோழையரே.

சித்திர விளக்கம் 34

அட்டமாசித்தி உபதேசித்தது

[கி. வா. ஜகந்நாதன்.]

சிவபெருமான் கைலாசத்தின ஒரு பக்கத்தில் இருந்து பெரிய ஆலமரத்தின் நிழலில் ஒரு சமயம் வந்து அமர்ந்தான். உமாதேவியாரும் அங்கே எழுந்தருளினர். அப்பெருமாட்டி இறைவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்க அதை வாங்கி மென்று இன்புற்றுப் போக மூர்த்தியாக எழுந்தருளி யிருந்தான் சிவபிரான. அப்போது பிருங்கி, நந்தி முதலிய கணநாதர்களும், சனகர் முதலிய நான்கு முனிவர்களும் அங்கே வந்து இறைவனை இறைஞ்சி நிற்க, அவர்களுக்கு எம்பெருமான் பல சிவ கதைகளைத திருவாய் மலர்ந்தருளினன். அவற்றைக் கேட்டு இன்புற்றிருந்தனர் யாவரும்.

அப்பொழுது முருகப் பெருமானுக்குப் பால் கொடுத்த யக்ஷிமார்கள் ஆறு பேர்கள் சைவ வேடம் விளங்க அங்கே வந்தனர். அவர்கள் இறைவன் இணையடியில் வீழ்ந்து வணங்கி, " எங்களுக்கு அட்டமாசித்தியை அருள வேண்டும் " என்று வேண்டினர். இறைவன் உமாதேவியாரைச் சுட்டிக் காட்டி, " இவள் பராசத்தியாகி எங்கும் நிறைந்திருக்கிறுள். இவளிடம் அணிமா முதலிய எட்டுச் சித்திகளும் பணிந்து ஊழியக்காரிகளாகக் குற்றேவல் செய்யும். ஆதலால் இவளை நீர் தியானித்தால் உங்களுக்குள்ள பழவினைகள் யாவும் போக்கி அட்டமா சித்தியை அருளுவாள் " என்று கூறி அந்தச சித்திகள் எட்டும் இன்னவை யென்று விளக்கி யருளினன். அவர்கள் கேட்டும் பழைய வினை காரணமாக அவற்றை மறந்து விட்டார்கள்.

அந்த நிலையில் இறைவன் அவர்கள் மறந்த அக்குற்றத்தை எண்ணி, " நீர் பட்ட மங்கை என்னும் தலத்தில் ஓர்

எள்ளளவு தூய்மை, இன்ப உளத்திருந்தால்,
வெள்ளம்போல் ஞானம் விளையுமிது நிச்சயமே.

ஆலமரத்தின் கீழே பாறையாகக் கிடப்பீர்களாக !'' என்று சாபம் இட்டான். அவர்கள் அஞ்சி, '' எம்பெருமானே, இச் சாபம் நீங்குவது எப்போது ?'' என்று கேட்க, சிவபெருமான் '' நீங்கள் கருங்கற் பாறையாக ஆயிரம் ஆண்டு அங்கே கிடப் பீர்கள். அப்பால் நாம் மதுரையில் நின்றும் எழுந்தருளி வந்து உங்களுக்குப் பழைய உருவத்தை வழங்கி அட்டமா சித்திகளை யும் தெளிய வைப்போம் '' என்று அருளினன்.

இறைவன் இட்ட சாபப்படியே அந்த ஆறு பெண்மணிக ளும் சோழ மண்டலத்திலுள்ள பட்டமங்கை என்னும் தலத்தில் ஆலமரத்தின் கீழ் பாறையாக உருமாறிக் கிடந்தார்கள். ஆல மரததிலிருந்து பழுகள் உதிர்நது பாறை முழுவதும் மூடின.

இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. மதுரையில் உள்ள எம்பெருமான அவர்களைப பழைய நிலை பெறும்படி அருள்பாலிக்கத் திருவுள்ளம் கொண்டான். குருமூர்த்தி வடிவம் எடுததுக் கொண்டு பட்டமங்கையில் பாறையாக இருந்த இயக்கிமார் முன் வந்து தோன்றினன். தனனுடைய திருவருள் நோககத்தை அவர்கள்பாற் செலுத்தவே, பாறை வடிவம் மாறி மீட்டும் பாவையர் வடிவம் பெற்று அநத ஆறு மங்கையரும் இறைவன் அடியில் விழுந்து இறைஞ்சினர்கள். இறைவன் அவர்களுடைய சென்னிமேல் தன் திருக்கரத்தை வைதது அருள் புரிந்தான்.

அப்பால் அட்டமா சித்திகள் இவையென்று அவர்கள் தெளிவாக உணரும்படி திருவாய் மலர்ந்தருளலாயினன.

'' எட்டு மகா சித்திகள் என்பவை, அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராபதி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்து வம் என்பன. மனத்தில் மாசற்ற சித்தர்களின் விளையாட்டு இவை. இவற்றில அணிமா என்பது மிகச் சிறிய அணுவாக நின்று எலலா உயிர்களிடத்திலும் புகுந்து உறையும் சித்தி.

ஊக்கம் உளதேல், உயர்விக்கும் யோகசுக
நோக்கம் வரு(ம்;)இந்த நுட்பததை ஓரீரே.

இல்லாத் தத்துவங்களையும் பிரபஞ்சங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு பரந்து நிற்கும் சித்தியே மகிமா ஆகும். இலகிமா என்பது, தோற்றத்தில் மேரு மலையைப் போல இருந்தாலும் எடுத்தால் பரமாணுவைப் போல் மிகவும் இலேசாக இருத்தல். அதற்கு எதிராகப் பரமாணுவைப்போல மிகமிகச் சிறியதாய்த் தோன்றி மேருவைபபோல் பாரமுள்ளதாக இருத்தல் கரிமா. பாதாளத்தி லிருந்து பிரமலோகத்துக்கு ஒரு கணத்திற் செல்லுதல், மீட்டும் பிரமனுலகத்திலிருந்து பாதாளத்தை அடைதல் ஆகிய ஆற்றலைத் தருவது பிராப்தி என்னும் சித்தி. கூடுவிட்டுக் கூடு பாய்தல், ஆகாசத்தில் உலாவுதல், தான் வேண்டிய யாவும் இருந்த இடத்துக்கே வரும்படி செய்தல், தன் உடம்பில் உள்ள ஒளியினால் பூவுலகத்திலும் வானுலகத்திலும் உள்ள பொருள்களைத் தெரிந்து கொள்ளவும், மூன்று காலங்களிலும் நிகழ்வனவற்றை அறிந்துகொள்ளவும் ஆற்றல் தருவது பிராகாமியம் என்னும் சித்தி. ஈசத்துவம் என்பது ஈசனைப்போல முத்தொழிலும் செய்து, சூரியன் முதலிய கிரகங்கள் யாவும் தன் பணி கேட்கும்படி விளங்குவது. வசித்துவம் என்பது, எறும்பு முதல் பிரமன் வரையில் யாவரையும் தன் வசப்படுத்தி வைப்பது.

"எம்மை உணர்ந்த சிவயோகிகள் இந்தச் சித்திகளை விரும்ப மாட்டார்கள். ஆனாலும் இவை அவர்களை நிழல் போலச் சென்றடையும். அதனால் உலகத்தில் உள்ளவர்கள் அவர்களின் பெருமையை உணர்ந்து கொள்வார்கள்."

இவ்வாறு எம்பெருமான் அந்த ஆறு மங்கையருக்கும் அட்டமா சித்தியைப் பற்றிய விளக்கத்தைச் செய்தருளி மறைந்தான. அப்பால் அவர்கள் அம்பிகையைத் தியானம் செய்து சித்திகள் எட்டும் கைவரப் பெற்றுக் கைலைமலையை அடைந்தார்கள்.

அருளுடையர் சேவை, அதிகநலம் ஈயும்;
பெருமை விளைவிதுவே; பேச்சு வேறில்லையரோ

பொது

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஆனுத ஞான புத்தி யைக்கொ டுத்ததும்
ஆராயு நூற்க ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ஊத்துயி — ரழியாதே
ஆசாப யோதி யைக்க டக்க விட்டதும்
வாசாம கோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபாத னேன்மி கப்ர சித்தி பெற்றினி — துலகேழும்
யானுக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேஞூற வோதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ளித்ததும் — இடராழி
ஏருத மாம லத்ர யக்கு ணத்ரய
நானுவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்ததும் — மறவேனே;
மாநாக நாண்வ லுப்பு றத்து வக்கியோர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி — லொருமுவர்
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெ டுத்த கற்பக — வனமேவும்
தேநாய கானை னத்து தித்த வுத்தம
வானுடர் வாழ லிக்ர மத்தி ருக்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய — வரைமோதிச்
சேருப சோரி புக்க ளக்கர் திட்டெழ
மாருநி சாச ரக்கு லத்தை யிப்படி
சீராவி னுல றுத்த றுத்தொ துக்கிய — பெருமாளே!

மக்களிடம் ஆக்கசக்தி மருவியது; எண்ணுனரேல்
துக்கம்போம், கன்மங்கள் தூரம்போம் அன்னூர்க்கே.

(பதவுரை) (மாநாக............வித்தகர் வாழ்வே !)

மா நாக நாண் வலுப்பு உற துவக்கி - மாபெரும் வாசுகியை, வன்மை நாணியாக வரிந்து கட்டி ;

[நாகம் - பாம்பு. நாண - நாணி. துவக்கி - கட்டி.]

ஓர் மா மேரு பூதர தனு பிடித்து - ஒப்பற்ற பெரிய மேரு மலையை வில்லாக (வளைத்துப்) பிடித்து ;

[பூதரம் - மலை ; பூ - பூமி ; தரம் - தரிப்பது ; வேர்களால் தாங்குவது.]

ஒரு மால் ஆய வாளியைத் தொடுத்து - திருமால் ஆகிய ஒரு (புனித) கணையைப் பூட்டி ;

[மால் - நாரணர். வாளி - அம்பு.]

அரக்கரில் ஒரு மூவர் மாளாது, பாதக புர த்ரயத்தவர் தூள் ஆகவே முதல் சிரித்த வித்தகர் வாழ்வே - அரககர்களுள் [தாருகாட்சன், கமலாட்சன், வித்யுந்மாலி எனும்) மாபெரும் தலைவர் மூவர்மட்டும் மாளாமல், பாதகர்களான (பொல்லா) முப்புர வாசிகள் பொசுங்கி யழியுமாறு, முன்னொரு சமயம் புன்முறுவல் புரிந்த முற்றறிவரான சிவனார் தந்த செல்வமே !;

[புர த்ரயததவர் - திரிபுரவாசிகள். வித்தகா - ஞான சொரூப சிவபிரான.]

(வலாரி.......................பெருமானே !)

வலாரி பெற்றெடுத்த கற்பக வனம் மேவும் தேம் நாயகா எனத் துதித்த உத்தம வானுடர் வாழ - இந்திரன் தோற்று வித்த கற்பகத் தருக்கள் சூழ்ந்த தேவலோக நாயகா என்று, போற்றும உததம வானவாகள உய்தி பெற ;

[வலாரி - வலன் எனும் அவுணனை யழித்த இநதிரன் எனும் காரணப்பெயர். தேம் - தேசம் ; இடைக்குறை.]

மூண்டு முயன்றால், முடியாத(து) ஒன்றில்லை;
ஆண்தகமை ஆற்றல், அருளொடுறும் காலேயே.

விக்ரம திருக்கழல் சேராத சூரனை துணித்து அடக்கி - விசேட கிரமத்தை யுடைய திருவடிகளைச் சிந்திக்காத சூர பதுமனை இருகூறு ஆக்கி, (மயிலும் சேவலுமாக) மடக்கி ;

[விக்ரமம் - ஞானம்.]

அவரைமோதி- (மாயையின் சாயையாம்) அம் மலையைச் சாடி ; [இது, ஞானை மறைத்தக் காத்த மலை.]

சேறு ஆய சோரி புக்கு அளக்கர் திட்டு எழ - சேருன குருதி சென்று, உப்புக் கடலில் மேடு உண்டாக ;

[சோரி - உதிரம். அளக்கர் - உப்புக் கடல்; அளம் - உப்பு. திட்டு - மேடு.]

மாறு ஆம் நிசாசர குலத்தை இப்படி சீராவினல் அறுத்து அறுத்து ஒதுக்கிய பெருமாளே - மாறுபட்ட பகைவர்களாகிய அசுர வம்சத்தை, இவ்விதமே உடைவாளால் பேதித்துச் சிதைத்துத் தள்ளிய பெருமிதமான இறையோனே !;

[மாறு - பகை. நிசாசரர் - நிசியில் உலவும் கூட்டத்தார். நிசி - இரவு. சீரா - உடைவாள்.]

(ஆறுத ஞான புத்தி........................அழியாதே.)

ஆறுத ஞான புத்தியைக் கொடுத்ததும் - அழியா ஞான மதியை அருளியதையும் ; [ஆறுத - கெடாத.]

ஆராயும் நூல்களில் கருத்து அளித்ததும் - ஆய்தற்குரிய (அருள்) நூற்களின உள் கருத்தை உணர்த்தியதையும் ;

ஆதேச வாழ்வினில் பிரமித்து இளைத்து உயிர் அழியாதே ஆசா பயோதியைக் கடக்க விட்டதும் - நிலையிலா வாழ்வில் ப்ரம்மை கொண்டு, (அதன் வழியே) அயர்வெய்தி, (வீணுகப்) பிராணன வரையும் ஆகாதபடி, ஆசைக் கடலைத் தாண்டும் ஆற்றலைத் தந்ததையும் ;

முன்னைய புண்ணியத்தால் செல்வம் முதிர்ந்துவரும்;
பின்னை செய் பாவம் பெயர்ந்தழித்தல் ஓரேமோ?

[ஆதேசம் - நிலையிலாமை; ஆதேச வாழ்வு என்பதற்கு, கர்ம ஆதாரமான காய வாழ்க்கை எனப் பொருள் கோடலுமாம். பிரமித்தல் - பொருள் அல்லவற்றைப் பொருள் என்று மருளுதல். உயிர் - சுவாசம். ஆசா - ஆசை. பய உததி - பயப்பிக்கும் கடல்; எனவே இது, ஆசைகளின் வழியே பெருகி வரும் பிறவிக்கடல் எனும் குறிப்பு.]

வாசா மகோசரத்து இருத்துவித்ததும் - மனோவாக்கிற்கு எட்டாத அதீத நிலையில் (தனியே) தங்க வைத்ததையும்;

[வாசா மகோசரம்; வாக்கால உரைக்க, மனத்தால் நினைக்க எவராலும் இயலாத இடம்.]

ஆபாதனேன் மிக பிரசித்தி பெற்று - தாழ்ந்தவனும் எளியேன் உலகம் போற்றும் ஏராளமான புகழ் எய்தி;

[ஆபாதன் - கீழ்மையன; வடசொல்.]

இனிது உலகு ஏழும் யான் ஆக - ஏழுலகில் உள்ளவரும் உள்ளவையும், எனது உருவமாக இனிது தோன்ற;

நாம அற்புத திருப்புகழ் தேன ஊற ஓதி - அற்புதப் பெயர் அமைந்த திருப்புகழை, தேனபோல் ஊறுசுவை உண்டாகப் (பரம அனபொடு) பாடி;

எத் திசைப் புறத்தினும் ஏடு ஏவு இராஜதததினைப் பணிதததும் - (தமிழகத்தின) எட்டுத் திசையிலும (திருப்புகழ்) பரவுமாறு, ஏடுகளை அனுபப வல்ல அரிய மேன்மையை அளித்ததையும; [இராஜதம - கவிராஜ ஆட்சி.]

இடர் ஆழி ஏருத மா மலத்ரய குணத்ரய - இடர்க் கடலில இருநது (கரை) ஏருதபடி தடுக்கும் மோசமான மும்மலமும், முக்குணங்களும்;

[இடர - துனபம. ஆழி - கடல். மா - இருள். மல த்ரயம் - (ஆணவ கன்ம மாயை எனும்) மும்மலங்கள. குணத்ரயம் - (இராஜச, தாமச, சாதவிகம் எனும) முக்குணங்கள்.]

உடம்பால் முயன்ருல, உணர்வுநலம் பாழாம்;
திடஙகொள் மனமுயல்வால் அறிவு தெளிவுறுமே.

நாஞு விகார புற்புத பிறப்பு அற – பலவகை வேறுபாடுகள் (பல்லிளிக்கும்) குமிழி ஒத்த பிறவி (வேர், அடியொடு) பெயர்ந்து அழிய ;

[நாஞு விகாரம் - குலம், குணம், உருவ அமைப்பு, மொழி, சமயம் முதலிய பல வேறுபாட்டு விளைவுகள். புற்புதம் - (நீர் மேல் தோன்றித, தளதளத்து வெடித்து மறையும்) குமிழி.

ஏது ஏமம் ஆய் எனக்கு அநுக்கிரகித்ததும் மறவேனே - காரண இன்பக் காழ்ப்பாகி, மாபெரும் திருவருள் பாலித்ததையும் (எனறும்) மறவேன் எளியேன், (எ-று.)

[ஏது - காரணம். ஏமம் - காப்பு; இன்பம்.]

விரிவுரை.

முப்புரத்தின் தலைவர் மூவர். புனித சிவத்தை அவர்கள் பூசிக்கும் தொழிலினர். அதனல், அரச நிர்வாகத்தை அரக்கர் ஏற்றனர். இரக்கம் அற்ற அவர்களால், எங்கும் அககிரமங்கள் எழுந்தன.

மண்ணவர் மருண்டனர். விண்ணவர் வெருண்டனர். பாதலர் பதைத்தனர். அறிந்த சிவஞர் எழுந்தார். வேர்களால் நிலம் தாங்கும் மேருமலை, வன்மை வில்லாகி வளைந்தது. நாக வாசுகி நாணி ஆயினன். அரி பரந்தாமர் அம்பாஞர். அக் கணையும் வில்லும் கைக்கொண்ட புனித இறைவர், பூமியாகிய தேரில் புறபபட்டார்.

வில்லான, நாணியான, அம்பான எங்களால்தான் அழியப் போகிறது முபபுரம் என்று எண்ணி, ஒவ்வொருவரும் இறுமாந்தனர். அவர்கள் நினைவை, சிவஞர் அறிந்தார், முப்புரஙகளை நோக்கி முறுவலித்தார். சிரிப்பில் நெருப்பு சிதறியது. அரை நொடியில் முப்புரங்கள் அழிந்தன. சதிசெய் அவுணர்கள் சாம்பர் ஆயினர். அந்நிலையிலும், அவுண அதிபர்

அறிவால் முயன்ருர்க்கு, ஆகாத(து) இல்லை;
செறிவுபெறும் சூழ்நிலைகள்; சீர்பெறலாம் காணீரே.

கள் எழுந்திலர். இறை வழிபாட்டிலேயே இருந்தனர். அவர்கள் தவக்கனல், சிவக்கனல் வெம்மையைத் தணித்தது. அதன்பின், சிறந்த அம் மூவரும் சிவகணர் ஆயினர். இது, சிவபாரம்ய செய்தி.

நினைத்தவைகளைக் கற்பகம் நிறைவேற்றும். அக் கற்பகத் தருக்கள், எங்கும் விண்ணில் இருக்கின்றன. கனிவொடு இந்திரன் அவைகளைக் காப்பாற்றுகின்றான். தேவர்கள் வாழும் அத்தேசம், தேவலோகம் எனப்பெறும். பயனுள கற்பக மலர்கள், தேவர்கள் பரனை அர்ச்சிக்கப் பயன்படு கின்றன. இதனால் புண்ணியர்கள் தங்கும் அப்பொன் னுலகம், குமரா! வளர்விக்கும் உனது அருளாக்கில் வாழ்கிறது. அந்த அருமையை அறிந்து, சிறந்த வித்தகர் வாழ் வே! கற்பக வனம் மேவும் தேம்நாயகா! என்று துதித்து, அருமை வானவர் உம்மிடம் அடைக்கலம் ஆகின்றனர்.

வாழ்த்தும் வானவர் வாழ்வு பெற, என்றும் திருவுளத்தில் எண்ணுவீர். விக்ரமத் திருவடிகளைத் தியானிப்பவர், விக்ரமர் என்று ஆவர். அவைகளை மறந்தவர், அக்கிரமர் என்று ஆகி ஆரவாரம் எழுப்புவர்.

அருள் நெறிக்குப் புறம்பான சூரபதுமன் ஆதியரால், அமரர்கட்கு வாழ்வில்லை. அது கருதி, இரண்டுயிர் ஓருடலாக இருந்த சூரபதுமனை, இரு கூறு ஆக்கினீர். ஒரு பாதி மயிலாக, மறுபாதி சேவலாக, அவைகளை ஊர்தியும் கொடியுமாக மடக்கி அடக்கினீர்.

ஆணவ சூரனை மறைத்த மாயா மலையை, கிரவுஞ்சத் தைத் தவிடு பொடி ஆக்கினீர்.

ஆயிரத்து எட்டு அண்டங்களின் அமரர்களை அடக்கி யாண்ட அவுணர் அனைவரையும், சீரா எனும் திருக்கை வாளால் சிதைத்தீர்! அரக்கரை அழித்து அமரரைக் காத்தவர்

ஆனம முயற்சியெனில், ஆஹாஹா! மெய்ப்பரம
ஆன்மா இணைகின்ற ஆனந்தம் எய்துமே

சிவபெருமான். அச்சிவம் அளித்த சேயாகி, அவுணரையழித்து, அமரர்க்கு அருளிய பெருமித செல்வப் பெருமானே!

அரைக் கீரையின் குணம் யாது? முளைக் கீரை என்ன செய்யும்? நெய்யை உருக்குவது ஏன்? மோரைப் பெருக்குவது எதற்கு? சந்திர ஒளியால் சார்பயன் யாது? காலை, பகல், மாலை வெயில் படலாமா? படுவதால் யாது விளையும்?

இவை முதலிய பல செய்திகளை, நூல்கள் கூறும். அவை களைக் கற்றறிவம்; அல்லது கேட்டறிவம். அறிந்தவைகளைச் சோதித்து அனுபவமும் பெறுவம். இது தான் புத்தி எனப் பெறும். சாஸ்திர பாஷையில், இவைகள் பாச ஞானம் எனப் பெறும். இது இரவலாகப் பெற்ற அறிவு என்பர்.

இவைகட்கு அயலானது பசு ஞானம். இது ஆன்மாவின் சொந்த அறிவு. இரவல் அறிவை விட, சொந்த மதிக்குச் சுதந்தரம் அதிகம். எனினும் இந்த அறிவு தடித்தது; தடிப்பில் விளைவது தடுமாற்றம். இதன வழியே இடர் அடைந்தவர் அளவிலர். இதன் பெயர் ஞானபுத்தி. இதை, பசுஞானம் என்றும் பகர்வர்.

கற்ற அறிவையும், கேள்வி வழி பெற்ற அறிவையும், சொந்த அறிவையும் சத் கருமத்தில் ஈடுபடுத்தி, வரத குமரா! நின்னை வழிபட்டு,

'தஞ்சம் தஞ்சம், சிறியேன் மதி

கொஞ்சம் கொஞ்சம் துரையே அருள்! என்று ஏத்திப் போற்றி இறைஞ்சுதல் செய்தால், பரம அருளொடு நீர் பாலிப்பது பதிஞானம், ஏற்றத் தாழ்வு எய்தாமல், என்றும் ஒரு படித்தா யிருக்கும் அந்த அருளறிவு, 'ஆறுத ஞான புத்தி' என்று அறியப் பெறும். முதன் முதலாக அதை அருளிய உமது பேரருளை, என்றும் மறக்க முடிவது இல்லையே!

சித்தம் ஒடுங்கிச் சிவமாகி நின்றவர்கள்,
அத்தர் சொருப அருளின்பர் ஆவரரே.

இந்த நிலை எய்திய பின், இதற்கு முன் கற்ற அறிவு, கேள்வியால் கிளைத்த புத்தி, சொந்த மதி மூன்றுலும் புரிந்திருந்தது அத்தனையும் பொய். வெறும் ஏமாற்றம்; வீணை ஆரவாரம். அவ்வளவுதான்.

"தலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு" அலமந்த கதைதான். அட பாவமே! எல்லாம் விழலிற்கு இறைத்த நீர்தானு!

ஆகுத ஞான புத்தியை அருளி, அதன் பிறகு வித்தக நூல் நுட்பங்களை விளங்க வைத்த அருளை, என்றும் எளியேன் மறவேன் பெருமா!

வாழ்க்கையா இது! சை. தொட்ட இடமெல்லாம் ஒட்டும். அதுவே வரவரக் கரைந்து தேய்நது கரந்துவிடும். என்ன வேதனை!

பாடு பட்டுத் தேடிய பணம், பையை நிறைத்தது; எடுக்கக் கனமா யிருந்தது. அது கண்டு மனம் இறுமாந்தது. விறுவிறுத்து செலவினங்கள் விளைந்தன. வரவர பை லேசாகயது. இறுதியில் ஒன்றும் இல்லை. ஏமாந்து போகிறது இதயம்.

அழகு என்று, எதையும் உணர்வு அணுகுகிறது. வளர்ந்த அழகு, வறண்டு சுருண்டது.

துள்ளித் திரிந்த காலம் ஒன்று. முன்னேற முடியாமல், முழு உறக்கம் வாராமல், சிறக்க உண்டது ஜீரணிக்காமல், ஒடுங்கி முடங்கும் உடலம் இது. வீணுகும் வாழ்க்கையில், போலி வெள்ளிச்சம் தானே பொஙகுகிறது. தோற்றம் கண்டோம்; மாற்றம் அறிந்தோம். இறுதியில் சங்கு ஒலிககிறது. இந்தக் கண்ருவி வாழ்வில், ஒருவரை ஒருவர் ஏய்ப்பதுபோல், தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் செய்தியை, எவரிடம் சொல்லி ஆறுவது?

தாழ்வொன்றும் சாராத் தரும நினைவினர்தம்
வாழ்வு வளர்தலுறும் வையகத்தில் நிச்சயமே.

இந்த 'ஆதேச வாழ்வில்', எத்தனை பிரமை. மயங்கும் இந்த மதி கெட்ட சூழ்நிலையில், இளைப்புத்தான் கண்டபலன்; முயல்வுகளால், விரையமாகிறது மூச்சு.

கண்டதை எல்லாம் காமித்து, அந்த ஆசைக் கடலில் ஆழ்வது அல்ல வாழ்வு. இதைப்பார்! அதைக் காண்! உன்னை நீ உணர்! என்று, சார ஹீன சாகரத்தைத் தாண்டுமாறு செய்த உமது தண்ணருளை, என்றும் மறவேன் இறைவவோ!

சொல்லால் சொல்லிக் காட்ட இயலாத, எங்கும் சுழன்று வரும் மனமும் கண்டறியாத மோனப்பரவெளி, வாசாமகோசரம் எனப்பெறும். தற்பர சிற்பர அத்தனியிடத்தில், எளிய என்னை யும் பொருளாக்கி இருத்தினை. அந்தக் கருணையை, அத்தா அடியேன் மறவேனே!

அடியேன் கிஞ்சிக்ஞன். அற்ப அறிவும் அற்பத் தொழி லும் உடைய எனக்கு, எல்லா வழியாலும் அப் பெயர் பொருந்தி யுளது. அஙஙனம் கீழ்த்தரமா யிருந்த என்னை,

"கந்தரனு பூதி பெற்றுக் கநதரனு பூதிசொன்ன எந்தை" என்று, எவரும் ஏத்தும் போற்றும் ஏற்றம் அளித்த உமது பேரருளை, மறக்க முடியுமோ மாதேவா!

எண்சாண் உடல்; 5½ அடி உயரம். இவ்வளவுதானா நீ? பரந்த நோக்கொடு, பாரனைததையும் பார்! என்று பணிததீர்.

இது என்ன அதிசயம்! உலகில் வாழும் உயர்திணை அஃறிணையாவும் நான்தானா! எங்கும் என்னையே அலலவா காண்கிறேன்! எப்பொருளும் என் மயமா யிருக்கிறதே!

உலகம் ஏழும் யானாக, மகாவாக்கிய அனுபவத்தைக் காட்டிய, உமது பேரருட் செயலை, மறவேன் அரசே! என்றும் மறக்கவே மாட்டேன.

உயர்நத சநதத் திருப்புகழை, நானா ஓதினேன்? ஊனெல் லாம், தோலெல்லாம், ஊறும் உதிரமெல்லாம், எனபெலாம்,

---

உத்தமராய் முன்னுள் உணர்ந்து முயன்றவர்கள்,
சிததராய்ப் பினனுள் செயல்வீரர் ஆயினரே.

என்பினுள் துணியெல்லாம் பாகாய் உருகும்படி, தேன்போல் இனிக்க நீ உள்ளிருந்து ஓதுவித்த கருணையை, ஒருநாளும் மற வேன் இவ்வெளியேன்.

இவைகளை ஓதுங்கள்! உய்யலாம். வாழ இதுதான் வழி என்று, உள்நாடு முழுதும் உணர உணர்த்தினேன். அதை உடனே ஏற்று, உரிமையொடு நாடு முழுதும் திருப்புகழை ஓதுகிறது. ஓதி உய்தி பெறுகிறது. இந்த 'இராஜதத்தை' அருளியது நீர்தானே! அடியேன் இதனை மறக்க இயலுமோ?

அநியாயத் தடிப்பளித்தது ஆணவம். மாய்மாலம் செய்து மயக்கியது மாயை. கால் தட்டி விழ வைக்கிறது கன்மம். மோசமான இப்படி மோது மலம் மூன்றும், 'மலத்ரயம்' எனப் பெறும்.

இறுமாந்து பேசி, செயலில் இறங்க வைக்கிறது இராஜசம். அட, சரிதான் போ! என்று அலட்சியப் படுத்தி, சோம்பலில் நித்திரையில் சொக்க வைக்கிறது தாமசம்.

ஞானியர் ஆடும் திருக்கூத்தோடு நானும் ஆடுவேன் என்று, நல்லவன் போல் நடிகக வைக்கிறது சாதவீகம. இந்தக் குணத்ரயங்களின் கூத்து கொஞ்சம் நஞ்சம் அல்லவே!

இடர்க் கடலில் இருந்து கரை ஏறுதபடி, 'மலத்ரயுங்கள்' மல்லாடுகின்றன; 'குணதரயங்கள்' குதிபோடுகின்றன.

இவைகளால் என்றும் துன்பம்; எதனிலும் வேதனை. இதுதான் உலகம். சார்ந்த மலச சார்பால, குண உறவால், குட்டை, நெட்டை, சிவப்பு, கறுபபு, ஆண், பெண்; இவை களுடன் குலபேதம், மொழிச் சணடை, சமயச சச்சரவு செய்யும் அளவிலாத விகாரப பிறப்புக்கள், நீர்மேல் குமிழி போல் நிறைகின்றன. தப்புத் தாளம் இட்டுத் தளதளக்கின்றன.

உள்ளம், உயிர்க்கு ஒளிநிறைந்த கண்ணுறும்;
கள்ளம் அகலக், கதிகாட்டும் காணீரே.

உடைகிறது வாழ்நாள் ; ஒழிகிறது சரிதை ; இப்படி எத்தனை தரம் பிறப்பது ? மினுக்கிக் குலுக்கி இறப்பது.

இதோபார் ! இங்கே வா என அழைத்து, காரண இன்பமாய் என்னில் நீர் கலந்து இருநததைக் கருதுகிறேன். துரையே! இப்படி, ஏது ஏமமாய், எனக்கு அநுக்ரகித்ததும், நினைக்கவே நெஞ்சம் நெகிழ்கிறதே !

1. ஆறுத ஞான புத்தி அநுக்ரகித்ததும், 2. நூற்களில் கருத்து அளிததததும், 3. ஆசா பயோதியைக் கடக்க விட்டதும், 4. வாசா மகோசரத்து இருத்துவித்ததும், 5. பிரசித்தி பெற்றதும், 6. உலகேழும் யானுக இருத்தலை யருளியதும், 7. திருப்புகழ் தேனுற ஓத வைத்ததும், 8. திருப்புகழை எவரும் ஓதப் பணித்ததும், 9. பிறபபறக் காரண இன்பமாய் என்னில் நீர் கலந்ததுமான வரலாற்று அனுபவங்களை, ஒருநாளும் மறவேன் மறவேன் என்று, விரிட்டுக் கூவி விளம்பியபடி.

(ஒவ்வொரு பகுதியையும் விரித்து விளக்கினுல், இவ்வொரு திருப்புகழே ஒரு நூலாய் விரியுமாதலின், ஓரளவு செய்தி உரையில் குறிக்கப் பெற்றது.)

வாழ்க திருப்புகழ் வளம் !

ஓம்.

கண்ணெதிரில் உள்ளதனைக் கண்டு மயங்காமல்,
எண்ணுவார் மெய்ப்பொருளை என்றென்றும் காண்பவரே.

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

3. இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க, நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசுஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க.
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க.

அருஞ்சொல் :

செவிகள் - காதுகள். நாப்பன் முழுதும் - நா+பல் முழுதும் - நாக்கினையும் பற்கள் எல்லாவற்றையும்; துரிசு - குற்றம்; கதுப்பு - கன்னங்கள்; யானைத்துண்டனார் - யானைமுகப் பெருமான்; துணைவன் - தம்பியான முருகன; திரு - அழகு; பிடரி - புறங்கழுதது (கழுத்தின் பின்பகுதி).

விளக்கம் :

இரண்டு காதுகளையும் அவற்றிற்குரிய இயல்புகளோடு (விளங்குமாறு) செவவேள காததருளுக - வாயை முருகவேள் காததருள புரிக. நாக்கையும் பறகளை எல்லாவற்றையும் நல மிகக குமரன் காப்பானாக. குற்றமற்ற கன்னங்களை ஆனை முகவனுககு இளைய அண்ணல் காக்க. அழகுடன் புறங் கழுத்தைச சிவசுப்பிரமணியன் காத்தருளுக.

விசேடம் :

செவி :—கேட்டல் என்ற பொருளுடைய சேவித்தலையுடைமையின் செவி என்ப.

வித்தக நற்செயலால் வீறுகொண்ட மேலோர்கள்,
தத்துவ ஞானம் தலைசிறக்க வாழ்பவரே.

இயல்புடன் :

கிரகணதோட முதலியவற்ருல் காதுகள் உறுப்பு நலனழிதல், செவிடு படல், இவை போல்வனவும் பிறவுமான குறைகளின்றிச் செவ்விதின் காக்க வேண்டலின் 'இயல்புடன்' என்ருர்.

செவ்வேள் :

செவ்வேள் - செம்மை+வேள். செம்மையாவது முத்திநலம். வேள் - விருப்பமூட்டுபவன். தாயின் கருப்புகுந்து உழலும் காமத்தையூட்டும் கருநிறமுடைய மன்மதனைக் கார்வேள் என்பர். அவனின வேறுபட்டு முத்திநல வேட்கையைவிளைத்துச் செங்நெறி செலுத்தும் செம்மேனியன் முருகன் எனற்குச் 'செவ்வேள்' எனப்பட்டது.

முருகவேள் :

"முருகு என்பது இளமை, வாசனை, தேன், அழகு, திருவிழா எனனும் பலபொருளொரு சொல்லாம். ஆகலின், என்றும் இளமையுடையான், தெய்வத்திருமணங் கமழும் மேனியன், கட்டழகுடையான், திருவிழாவுக்குரிய தேவனுயிருப்போன் முருகன் எனவாம். இளமையுடையோன் என்பது அரன் மகன், கௌரி நந்தனன், சேய் என்ற நாமார்த்தங்களையும் நல்கும். தேன் - இன்பப்பொருளில் வைத்தெண்ணப்படுமாற்ருனே ஆனந்த சொருபன் முருகன் எனவுமாம்" என்று பாம்பனடிகள் ஸ்ரீசுப்பிரமணிய வியாசம் விளக்கம் கூறுவது இங்கு நினைக்கத்தகும். முருகு என்ற சொல்லின் எல்லாப் பொருள்களும் விரவிவர

" முருகுலா நறிய முருகு
முருகு கோடியென முருகு

ஆனந்தம் ஆகின்ற ஆன்ம சொருபமிலே
மோனந்தம் கொண்டு முறுவல்புரி கின்றதுவே.

முருகு மூசுலக முருகு
முருகு ருதுமன முருகு"
என்ற திருவலங்கல் பாடலும் காண்க.

முருக நாமம் மொழிக்குத் துணையாகும்.
'முருகனென்று மொழிந்திலரேல் முத்திநல மிழந்தவரே'
(கந்தப்ப தேசிகர்)

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்து உணர்வென் றருள்வாய்"
(கந்தரநுபூதி.)

"ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்" (நக்கீரர்)

எனவே, முருகநாமத்தைப் பேசுதற்கு அமைந்த வாய் எவ்விதக் குறையும் எய்தாது காக்குமாறு முருகனை இறைஞ்சும் அழகு எண்ணி மகிழ்தற்குரியது.

குமரன் :

"குமரன் என்பதே குமாரன் எனப்படும். இஃது அரன் மகன் என்ற நாமார்த்தத்தைப் பொருந்தும். குமாரன் என்பது இளம்பிராயம் உடையானென்பது குறிக்கு மாற்றானே 'பிரமசாரி' எனும் பொருளும் தரும். சம்பவகாண்டம் முதல் அத்தியாயத்தில் 10ம் சுலோகத்தில் "ப்ரஹ்மசாரி" எனவும் சண்முகனைக் குறிக்கிறது. * * * பதினறு பிராயமுடையான 'குமரன்' என்றுங் கூறுப. கு - அருவருபபு, குற்சிதமெனவும், மாரன் - நாசஞ் செய்பவன் எனவும் வடநூலார் பொருளாக்குவர். அதனால் குமாரன் என்பதற்கு ஆன்மாக்களின் மலபந்தததைக் கெடுத்தருள்பவன் என்னும் பொருள் கொள்ளப்படும்." (சுப்பிரமணிய வியாசம்) குமரன் என்ற

உருவாகித் தோன்றும் உலகை மறுத்து,
அருவாகித் தன்னை யறிபவர்கள் ஞானியரே.

சொல்லின் பல்வேறு பொருள்களைக் 'குமாரஸ்தவ விளக்க வுரையில் குறித்துள்ளேன். அவற்றையும் கொள்க.

நாப்பல்....குமரன் காக்க :

நாக்கு உள்ளுக்கு இழுத்தாலும், பல்லு போனாலும் சொல்லு போகும். இவ்வித நாத்தளர்வு, பல்விழுதல் போன்றவை கிழப்பருவத்தாலும், பிணிகளாலும் நேரும். இவ்வித இடையூறுகள் எய்தாமல் காக்க வல்லவன என்றும் இளைய குமரன் ஆதல்பற்றி அக்குமரன் காப்பானாக என்று கூறினார்.

யானைத்துண்டனார் துணைவன் :

ஆனைமுகமுடைய கயமுகன் என்னும் அவுணன் வரபலங் கொண்டு அமரரை அலைத்தான். விண்ணோர் விமலனிடம் முறையிட்டனர். ஒரு சமயம் திருக்கயிலையிலுள்ள சித்திர மண்டபத்திற்குச் சிவனாரும் உமாதேவியாரும் சென்றனர். அங்கு ஆண், பெண் யானைகளுருவிலிருந்த சித்திரங்கள்மேல் திருக்கணணோக்கம் செய்தனர். உடனே சித்திர யானைகள் உயிர் பெற்று முயங்கின. சிவக்களிறும் உமைபிடியும் சேரவே ஆனைமுகனார் அவதரித்தார். கயமுகனைத் தமது தந்தம் ஒன்றை ஒடித்து எடுத்துக் கொன்றார். அந்த வேழமுகன் தம்பி வேல் முருகன்.

" தேடுங் கயமாமுகனைச் செருவில்
சாடுந் தனியானை சகோதரனே" (கந்தரனுபூதி.)

கன்னமதம் முதலியன பொழிவது யானை. அந்த யானை முகர் தம்பிதான் கன்னங்களைக் காக்க என்ற பொருத்தம் உன்னுக.

தோற்றிய இப்பிறப்பில், தூய செயல்புரியின்
ஏற்றம் பெறலாம்; இறையருளும் எய்தும்மே.

சிவசுப்பிரமணியன் :

சிவம் - அறுமுகச் சிவமான சுப்பிரமணியன். பிரமக் குழவியான பேரொளிப் பிழம்பினனே சுப்பிரமணியன் ஆவன்.

முக்கிய கவனிப்பு :

சண்முக கவசம் மந்திர மறை என்று அறிக. இதனைப் பொருளறிந்து படிக்காதபோது விபரீதம் விளையும். உதாரணமாக—

இருசெவிகளையும்... காக்க என்று படிக்காமல், இருசெவி —களையும் செவ்வேள் எனறு பாராயணஞ் செய்தால் களையும் என்ற சொல்லிற்கு 'அழிக்கும்' என்று பொருள்படும். ஆதலால் காதுகளைக் காப்பதற்குப் பதில் அழித்தற்கும் ஏதுவாகும். ஆகவே அன்பர்கள் 'செவிகளையுங்' என்று ஒன்ருகச் சேர்த்தே படித்தல் அவசியம்.

அருணகிரிநாத சுவாமிகள்

கோடி கரை முதல் குடவாயில் வரை

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

வேதாரணியத்தில் வேலவனைத் தொழுது அத்தலத்தினின்றும அரிதின் நீங்கி அயலிலுள்ள கோடி* என்னுந் தலத்தை (52) அடைந்து அங்குக் கந்தவேளைத் தரிசித்து "நீலமுகிலான" (846) எனத தொடங்கும் பதிகததைப் பாடினுர். இப்பாடலின் ஈற்றடிக்கு "சுருதி கூர்திரு நெல்வேலியுறை பெருமாளே" எனப் பாடபேதமும் உண்டு. "இத்தலத்துப்

* இது வேதாரணியம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த அகத்தியான்பள்ளி ஸ்டேஷனுக்குத் தெற்கு 5 மைல்.

விதிசரியா யில்லையென் வெம்பி யழுங்காமல்,
பதியின்தாள் பற்றி(ல்;)வாழ் பல்லிளிக்கும் காணீரே.

பதிகத்தில் "வனவேடர் விழ சோதி கதிர் வேலுருவு மயில் வீரா" என்றார். வள்ளியைத் திருடி வந்த பொழுது வேடர்கள் தொடர்ந்து வர அவர்களைத் தமது வேலால் முருகர் வீழ்த்தினர் என அருணகிரியார் கூறுகின்றார். இப்படியே 'பொருளின் மேல்' என்ற 341-ஆம் பாடலிலும், 'கலக சம்ப்ரம' என்னும் 940-ஆம் பாடலிலும் கூறியுள்ளார். ஆனால் கந்தபுராணத்தில் முருகவேள் தமது சேவலின ஒலியால் வேடர்களை வீழ்த்தினர் எனக் கூறப்பட்டுள்ளது.

இப்பாடலில் "காலனது நாவரவ வாயிலிடு தேரையென காயமரு வாவி விழ அணுகாமுன்" என வருவது குறிக்கத் தக்கது. நா - வார்த்தை—"நம்பி நாவினுள் உலக மெல்லாம் நடக்கும்" எனபுழிப் போல - சிந்தாமணி 316. இங்கு 'வார்த்தை' என்பது காலன் வைது உயிரை இழுத்துச் சொல் லும் வார்த்தைகள; அத்தகைய வைதற் சொற்கள் அணுகா முன் - அருள்தாராய் என்றார்; காலன் திட்டுகின்ற - வைதற் சொற்களைப் பின்வரும் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் பாடலிற் பரக்கக் காணலாம் :—

"என்ன செய்குவாய் மனமே—நாளை
ஏமனிடத்தில—நீ என்ன செய்குவாய் மனமே!
நாளைக்—கறுத்த உருவமும் பருத்த உடலமும்
கனலைப போல விழியும் தனதிலலாத மொழியும்
கண்டவ ரஞ்சிடு பாசமும்—இரு
தணடகமாகிய சூலமும்—ஈட்டுக்
கருநிற மாகிய எருமைக் கடாவினில் ஏறி
ஒரு இமைப பொழுதினிற் பெருவரை போலவே சீறிக்,
காலதூதருடன கூடியே, இநத ஞாலந்தனிலே உனனைத்தேடியே
கண்டு, அடியார்க்குத் தொண்டு, செய்யாமல் நித்தம் உண்டு,
உறக்கம்கொண்டு, பெண்டுபிளளைக்குழைக்கும் பேயே! அடநாயே!

கணடபணடம் மெனறுதினறு காயம் வலிமையுற,
பெண்டுபிள்ளை தம்மைநம்பிப பேதலித்தல் ஆகாதே.

என்று கட்டிக் கரமதனால் கிட்டிச் சிரசுதனில்,
குட்டித் திறமாகவே தீட்டி, உலகுதனில்
ஒட்டிக் கிரட்டி யாகிய வட்டி வாங்கிப் பையில் கொட்டி,
அதை இருப்புப பெட்டி தனிலே வைத்துக்
கெட்டி செய்திட்டு வைத்த மட்டீ !

அட! க.சாசை பிடித்த பிசாசே - நீ - ஏறித்திரி
கரிகள் எங்கே ! பெரும் பரிகள் எங்கே !
தந்தக் கட்டில் எங்கே ! தங்கத் தொட்டில் எங்கே !
பவுன் காசும் எஙகே ! கொண்ட காதலெங்கே !
உத்தியோகம் எங்கே ! வியாபாரம் எங்கே !
துரைத்தனமும் எங்கே ! அதைக் காட்டு !

அரைக்கா சளவாகிலும் தாசருக் கீயாத கருமீ !
மிக்க வறுமீ ! - கொண்ட கன்னி யிருக்கத்
தாசி தன்னிடைச் சுகித்த சண்டாளா ! - என்றும்

கருத்திற் சிவநாமத்தைத் துதித்திடாமல் - வீண்
பொழுதைப் போக்குகின்ற கழுதை ! எங்கள்
கடவுளைத் துதியாத மடையா ! வா எனத்தானே உதையானோ !
- என்ன செய்குவாய் மனமே - நாளை
ஏமனிடத்தில் - நீ என்ன செய்குவாய் மனமே !''

இத்தலத்துப் பாடலில் ''காதலுட னேதுமடி யார்களுட னுடியொரு கால்முருக வேளெனவும் அருள்தாராய்'' என்னும் பகுதி நித்திய பாராயணத்துக்கு உரியது.

கோடியினின்றும் நீங்கி எண்கண் (53) என்னுந் தலத்தை* அடைந்து முருகவேளைப் பணிந்து 'சந்தனந்தி மிர்ந்தணைந்து'

* இந்த ஸ்தலம் திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் போகும் வழியில் உள்ளது.

வயதும் உடலும் வளர்ந்தாலும், வாய்மை
நலமிலதேல் என்னும்? நாறிப்போம் சூழ்நிலையே.

(839) எனத் தொடங்கும் * திருப்புகழைப் பாடினர். இப் பாடலில் "எனது மனம், வாக்கு, காயம் மூன்றும் உனக்கே ஆகும் வண்ணம் 'சந்ததம் புகழ்ந்து (வாக்கு), உணர்ந்து (மனம்), செம்பதம் பணிந்திரு (காயம்)' என்று மொழிந்தருள் வாய்" என வேண்டினர்,

இத் தலத்து வரலாற்றைச் சிக்கலெனுந் தலத்தைப் (46) பற்றிய இடத்திற் காண்க (பக்கம் 410).

இத்தலத்துத் திருப்புகழாகிய 'சந்த னந்தி மிர்ந்தணைந்து", என்ன அழகாக எத்துணை முடுக்குடன் அமைந்துள்ளதோ அத்தகைய அழகுடனும் முடுக்குடனும் சேய்த தொண்டர் புராண ஆசிரியர் இத்தலததைப் பற்றிப பாடும் போது.

"அந்த ஒண்ட லம்ப ணிந்த கன்று கந்த கந்த என்ற றைந்து
கொண்டெ டுழுந்து ளங்க ளிப்பனீர் சிறப்புடன்
எந்தை எண்க ணென்ற ஒண்ட லம்ப ரிந்த டைந்து
கந்த னின்புறம்பொ †னங்கு லந்த ளிற்புகா முடுக்குடன்
'சந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்கு மங்க டம்பி லங்கு
சண்பகஞ் செறிந்த' என்றெ டுத்துமோர் திருப்புகழ்
சிந்தை யுங்கு ளிர்ந்தி யம்பி அங்கு நன்க மர்ந்த கந்தர்
செம்பொ னம்ப தம்ப ணிந்தந் நற்றலம் விடுத்துமே,"
(990)

எனப் பாடியுள்ளார். ஆசிரியர் வரகவி யென்பதை உணர்த்த இப்பாடல் ஒன்றே போதும்.

* "பரன்ற னன்பில் வந்த" என்பதற்குப் "பரன் சிலம்பமர்ந்த" என்றும் பாடம். பரன் சிலம்பு = திருப்பரங்குன்றம்.

† குலம் = கோயில்

பெரியர் தகைமை பெருந்தன்மை; அந்த
உரிமை உடையவர்தான் உன்னுவது மங்கலமே.

எண்கணை விட்டகன்று திருக்கூடவாயில்* (54) என்னுந் தலத்தை அடைந்தார். அங்கு முருகவேள் சம்பந்தப் பெருமானது "மணங்கமழ் தெய்வத் திளநலங்" காட்டச் சம்பந்தரே முருக ரெனும்படி மிக அருமை வாய்ந்த "சுருதியா யியலாய்" என்னும் (841) திவ்யமான திருப்பதிகத்தைப் பாடிப் "பெருமானே! யாவரும் அறியொணுததை நீ குரு. வாய் எனக்குப் பகர்ந்தாயே! இப்பேறு யான் முன் ஜென்மங் களிற் செய்த தவத்தின் பயனே?"—எனப் பாராட்டி மகிழ்ந் தனர். இப்பதிகத்தில் பரம மாயையின் நேர்மையையும், சம்பந்தப் பெருமானது திருவிளையாடலையும் சொல்ல முடியாத அழகுடன் சொற்களை அமைத்துச் சுவாமிகள் பாடியுள்ளார். இது மனப்பாடஞ் செய்ய வேண்டிய ஓர் அருமைப் பாடலாகும்.

<u>அநுபூதி விளக்கம்</u>

முருகன் நடித்த நாடகம்

(கி. வா. ஜ.)

முருகன் நாடகம் ஆடுகிறன். அவனைப் போல நடிக்கிற வர் உலகத்தில் யாரும் இல்லை. இதோ வள்ளியின் மயலால் உழன்று உலைப்படும் மெழுகுபோல உருகி அந்தப் பெருமாட்டி யைத் தேடி அலைகிறவனைப் போல நடிக்கிறன். இடம் : வள்ளி மலை, காலம் : காலை

முருகன் : நாரத முனிவன் கூறிய இடம் இதுதானே? இதுதான் வள்ளிமலையோ? யாரையாவது கேட்கலாமா?

---

* திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் போகும் வழியிலுள்ள குறடாசசேரி ரெயில்வே ஸடேஷனுக்கு வடக்கு 8-மைல். சம்பந்தர் தேவாரம் பெற்ற ஸ்தலம்.

மானிடத்தில் வந்து, மதிமிகுத்து சீலமுடன
ஞானம் பெறவளர்ந்த ஞாதாக்கள் வாழியரோ.

[அருகே ஒரு முதியவர் போகிறார். அவரிடம் முருகன் செல்லுகிறான்]

ஐயா ! இதுதானா வள்ளிமலை ?

பெரியவர் : ஆம் ; இதுதான். வள்ளிமலையைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கும் நீர் யார் ஐயா? இந்த உலகத்தில் உள்ள எல்லோரும் இதை அறிவார்களே! நீர் இந்த உலகத்துப் பேர்வழி அல்லவோ ! (சிரிக்கிறார்.)

முருகன் : (மனதுக்குள) நாம் இந்த உலகத்துப் பேர்வழி அல்ல எனபதைத் தெரிந்து கொண்டா இவர் பேசுகிறார் ? (வெளிப்படையாக) இநதப பக்கம் வந்து பழக்கம் இல்லை. அதனால் கேட்கிறேன். மன்னிகக வேண்டும்.

[பெரியவர் போகிறார். முருகன் மலை ஏறுகிறான்.]

முருகன் : வள்ளிமலையைக் கண்டு கொண்டோம். இனி வள்ளியையல்லவா பார்க்க வேண்டும்? அவள் குறமகளிரோடு சேர்ந்து தினைப்புனம் காப்பதாக அல்லவா நாரத முனிவன கூறினான் ? அங்கே போய்ப் பார்க்கலாமா ?

[ஒரு குறவன் வருகிறான்.]

முருகன் : ஐயா ! இந்த மலையில் தினைப்புனம் இருக்கிறதாமே ! எஙகே இருக்கிறது தெரியுமா ?

குறவன் : தினைப்புனம் என்று சொல்லாதீர்கள். தினைப் புனங்கள் எனறு சொல்லுங்கள். மலை முழுவதும் எத்தனையோ தினைக் கொல்லைகள் இருககின்றன. நீர் எதைக் கேட்கிறீர் ?

முருகன் : நம்பிராஜனுடைய தினைப்புனம் இருக்கும் இடம் தெரியவேண்டும்.

குறவன் : எங்கள் மகாராஜாவுக்கு ஆயிரம் தினைப்புனங்கள் சொநதம். எதை யென்று அடையாளம் சொல்வது ?

முருகன் : அந்த மன்னருடைய புதல்வி வள்ளிநாயகி காவல் புரியும் தினைப்புனம் எங்கே இருக்கிறது ?

ஒருகோடி மூலிகையுள், ஒனறில்முத(து) உண்டாம்;
ஒருகோடி பேருள், ஒருஞானி தோன்றுவனே.

குறவன் : (முருகனை ஏற இறங்கப் பார்க்கிருன்.) உம்மைப் பார்த்தால் கட்டிளமையோடு இருக்கிறீர். நீர் வள்ளி நாச்சியார் இருக்கும் இடத்துக்குப் போக முடியாதே! அதை ஏன் கேட்கிறீர்? நல்லவேளை என்னிடம் கேட்டீர். வேறு யாரிடமாவது கேட்டிருந்தால் வார்த்தையினுல் பதில் சொல்லாமல் கையினுல் பதில் சொல்லி யிருப்பார். பேசாமல் வந்த வழியே போம். (குறவன் போகிருன்.)

முருகன் : அடதோ! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே! கட்டுக் காவல் உள்ள இடமா தினைப் புனம்? நான் அங்கே போகக் கூடாதாமே!

[யாரோ ஒரு முதியவள் வருகிருள்.]

முருகன் : தாயே, எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டும். உன்னைப் பார்ததால் என்னைப் பெற்ற அன்னை மாதிரி இருக்கிருய். உன்னுல் ஒரு காரியம் ஆகவேண்டும். நான் கேட்பது தவறு என்று எண்ணுதே. ஒரு பெரியவர் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறேன்.

கிழவி : என்ன அப்பா சொல்கிருய்? உனக்கு என்ன வேண்டும்?

முருகன் : இந்த மலைக்கு அரசர் நம்பிராஜர் இருக்கிருரே அவருடைய பெருமையை உணர்ந்து இங்கே வந்திருக்கின்றேன். அவருக்கு ஒரு மகள் இருக்கிருளாம். அவள் எங்கே இருக்கிருள்? அவளைப் பார்க்க முடியுமா?

கிழவி : (இவளும் முருகனை ஏற இறங்கப் பார்க்கிருள். முருகன் திருவுருவம் அவள் உள்ளத்தையே உருக்குகிறது. தனக்குள் பேசிக் கொள்கிருள்.) என்ன அழகு! என்ன கவர்ச்சி! வள்ளிக்கு இவன் மணவாளனுனுல் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்! அந்தப் பெண்ணும் வளர்ந்து நிற்-

---

உள்ளம் கனிந்தால், உலகம் தலைவணங்கும்;
கள்ளம் பழுத்தால், கடுங்கேடு நிச்சயமே.

கிறாள். (வெளிப்படையாக) வள்ளியையா பார்க்க வேண்டும்? அவள் தகப்பனுரைப் பார்த்தால் போதாதோ?

முருகன்: நான சொன்னேனே, அந்தப் பெரியவர் ஒரு தவ முனிவர். அவர் எனக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறார். வள்ளி நாயகியைப் பார்த்து நேரிலே சொல்ல வேண்டிய இரகசியம் அது. அதனால் அவளைத் தேடுகிறேன். அவள் காக்கும் தினைப்புனம் எது? கொஞ்சம் வழிகாட்டவேண்டும்.

கிழவி: உன்னைப் பார்த்தால் அரச குமாரனைப் போல இருக்கிறாய். வேடர் குலத்தில் இப்படி ஒரு பிள்ளையை நான் கண்டதில்லை. நீ நம்பி ராஜாவையே பார்த்து அவர் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்கலாமே!

முருகன்: அத்தனை துணிவு எனக்கு இல்லை, தாயே! அதைப் பற்றிப் பின்னால் யோசித்துக் கொள்வோம். எனக்குக் கட்டளை யிட்ட முனிவர் அவளை முதலில் நேரிலே பார்த்து வரும்படிதான சொனனார்.

கிழவி: அவளிடம் என்ன சொல்லவேண்டும்?

முருகன்: அதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று அவர் சொல்லி யிருக்கிறார். உன்னைப் பார்த்தால எனக்கு உள்ளம் உருகுகிறது. உன்னிடம் வந்த காரியத்தைச் சொல்லி விடலாம் எனறு நினைக்கிறேன். ஆனால் முனிவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாது என்று அஞ்சுகிறேன்.

கிழவி: சரி, குற்றம் இல்லை, வள்ளி நாயகியைப் பார்க்கலாம். ஆனால ஆரும் அறியாமல் போகவேண்டும். அவள் எபபோதுமே தினைப புனத்தில் இருக்க மாட்டாள். சில காலம் சுனைக்குச சென்று தோழிமாருடன் நீராடி இன்புறுவாள். சில காலம் அருவியிலே குள்ளக்குளிர நின்று ஆடுவாள். மலைக்கு

எலலார் இடத்தும் இரஙகியருள் பாலிகரும்
நல்லார் நிழலிந்த நானிலத்தை ஆளுமரோ.

எதிரே கூவி எதிரொலி வருவதைக் கேட்டுச் சிரிப்பாள். முருகா, முருகா என்று எப்போதும் முருகனை திருநாமத்தையே சொல்வாள்.

முருகன் : அப்படியா? தினைப்புனத்தைக் காவல் புரியும் போது அவள் எங்கே எப்படித் தங்கி யிருப்பாள்?

கிழவி : அது தெரியாதா உனக்கு? தினைப்புனத்தின் நடுவில் பரண்போட்டு, அதில் குடிசை மாதிரியும் முற்றம் மாதிரியும் போட்டிருக்கிறார்கள். அந்தப் பரணி லிருந்தபடியே ஆலோலம்பாடிக் கவண் கல்லை வீசிக கிளியை ஒட்டுவாள். தட்டையை அடித்து ஓசைசெய்து குருவியை ஓட்டுவாள். அவள் பாடும் ஆலோலம் காதுக்கு இனிமையாக இருக்கும். அவள அழகோ சொலவி எல்லை காண முடியாது. அதோ அந்த வேஙகை மரத்தைத் தாண்டிச சென்றால் அவள் இருக்கும் தினைப்புனத்தின் ஒரு பககம் தெரியும். போகும் வழியில் ஒரு சுனை இருககிறது. அதிலதான் அவள் நீராடுவாள். ஜாககிரதையாகப் போய்வா அபபா.

(கிழவி போகிறாள். முருகன் நடக்கிறான்.)

முருகன் : நல்ல வேளை! இநதக் கிழவி நமக்கு இதமான பதிலைச சொனனாள். ஒருகால வள்ளி சுனையில் நீராடுவாளோ? அங்கே போய்ப பாாக்கலாமா?

(அலைந்து திரிந்து சுனையை அணுகுகிறான்.)

இதுதான் அநதச் சுனை போலும்! வள்ளியைக் காண வில்லையே; வந்து விட்டுப் போயிருக்கலாம். இநதச் சுனை தான் எனன பாக்கியம் உடையது; ஏ சுனையே; நீ பெற்றபேறு எனக்குக் கிடைக்கவில்லையே! அவளுடைய திருமேனி அழகு முழுவதும் உணர்ந்து களிக்கிறாய், சுனையே! நீ வாழ்க... இந்தச் சுனை நீரை உண்டு தாகம் தீரலாம். (உண்ணுகிறான்.)

பிறர்சிறுமை கூறார், பேருள்ளம் கொண்டோர்;
திறனுரும் நற்செயலைத், தேடிச்செய் கின்றாரே.

என்ன இது! எவ்வளவு சுவையாக இருக்கிறது! வள்ளியின் திருமேனி இதில் மணக்கிறதே! ஆனல்...என் வேட்கை தீரவில்லையே! ஆயிரம் மடங்கு அதிகரித்துவிட்டதே!

(ஒரு முதிய காவலன் அங்கே வருகிருன்.)

முதியவன்: யார் ஐயா அது? இங்கே ஏன் வந்தீர்?

முருகன்: தாகமாக இருந்தது. தண்ணீர் குடிக்க வந்தேன்.

முதியவன்: உனக்கு வேறு சுனை கிடைக்கவில்லை? இங்கே உன்னை யார் வரச்சொன்னது? வள்ளிநாயகி நீராடும் சுனையில் ஆடவர் வந்து பருகுவதோ நீராடுவதோ கூடாது என்ற நியதி உனககுத தெரியாதோ?

முருகன்: ஐயா, அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் இவ்விடத்துக்குப் புதியவன். சுற்றி அலைந்தமையால் நீர்வேட்கை உண்டாயிற்று. இங்கே சுனை இருப்பது கண்டு இந்த நீரை உண்டேன. ஆனல் என்தாகம் தணியவில்லை. அதிகமாகி விட்டது.

முதியவன்: என்ன என்னவோ உளறுகிருயே! இந்தத் தண்ணீரை உண்டதற்குக் குறைவில்லை. தாகம் தீரவில்லையென்று சொல்கிருயே! நீ இந்த உலகத்தில் இருக்கிறவனே, இல்லை தேவலோகத்திலிருநது வந்து குதித்திருக்கிருயோ! இந்தச சுனைநீர் உன் தாகத்தை தணிக்காவிட்டால், வேறு எந்த நீரும் தணிகக முடியாது. சரி, சரி, இந்த இடத்தை விட்டு உடனே போயவிடு.

முருகன்: ஐயா, ஒரு செய்தி கேட்கவேண்டும். நீங்கள் யாரோ வள்ளிநாயகி என்று சொன்னீர்களே! அது யார்? தேவலோகத்துப் பெண்ணே?

புண்ணியத்தின் நன்மனம், பொங்கி எவர் வாழ்க்கையையும் கண்ணியமே செய்யும், கடைசிவரை காக்குமே.

முதியவன் : என்ன தம்பி! என்னைக் கிண்டல் பண்ணுகிறாயா? வள்ளி நாயகியை உனக்குத் தெரியாதா? எங்கள் நம்பி ராஜா மகள் என்பது தெரியாமலா இங்கே திரிகிறாய்?

முருகன் : அதுதான் முன்பே சொன்னேனே! நான் இந்த இடதத்துக்குப் புதியவன என்றேனே! அந்த வள்ளிநாயகி அந்தப்புரத்திலே இருபபாளோ?

முதியவன் : அவள் என்ன சிறையில் இருப்பவளா? ஆலோலம்பாடி ஆனந்தமாகத தினைப்புனம் காக்கிறாள். இந்த விசாரணையெல்லாம் உமக்கு எதற்கு? போ ஐயா, போ!

(முருகன் மறுபடியும் அலைகிறான். ஓர் அருவியை அணுகுகிறான்.

முருகன் : இதோ அந்த அருவிதான் வள்ளி ஆடும் அருவியாக இருக்கவேண்டும். நாமும் போய்ச் சற்று ஆடலாமா?

(அருவியில் ஆடுகிறான்.)

ஆ! என்ன குளிர்ச்சி! என்ன வேகம்! வள்ளிநாயகியின் திருமேனியைத் தழுவும் பேறு இந்த அருவிக்கும் இருக்கிறது. நாமோ இன்னும் அவளைக் காணக் கூட இல்லை.... அருவியே! வள்ளிநாயகியின் அழகு எப்படி இருக்கும்? நீ இடையறாமல் நீரைப் பொழிகிறாயே! அவளும் அருளைப் பொழிவாளா? (ஏங்கி நிற்கிறான்.)

மறுபடியும் அந்தச் சுனைக்கே சென்று பார்க்கலாமா! ஒருகால் இப்பொழுது அவள் வந்தாலும் வரலாம். நமக்கு அதிருஷ்டம் இருந்தால் அவளைக் காணலாம்.

(மறுபடியும் சுனைக்கு வருகிறான். அதை வலம் வருகிறான்.)

முருகன் : இனித் தினைப்புனத்துக்கு போகலாம். அங்கே கட்டுக் காவல் மிகுதியாக யிருக்குமோ?

இசைவிழைந்து, வசைவெறுக்கும் இன்பநெறி யாளரிடம்,
இசமான வாழ்க்கை நீடித்தல் கண்டோமே.

(அலைந்து திரிந்து தினைப்புனத்தை அணுகுகிறான். வள்ளி ஆலோலம் பாடுவது கேட்கிறது.)

இந்த இனியகுரல் என்னை என்னவோ செய்கிறதே! அமுத மழையில் நஞ்சு கலந்தது போல அல்லவா இருக்கிறது? காதுக்கு இனிமையாக இருக்கிறது. அதே சமயத்தில் கருத்தில் ஏதோ முன் அறியாத தாபத்தை எழுப்புகிறதே!

(பின்னும் தினைப்புனத்தை நெருங்கினான்.)

இதுதானோ தினைப்புனம்? எவ்வளவு பெரிதாக இருக்கிறது! தினையின் மறைவிலே இருந்து கொஞ்சம் கவனிக்கலாமா? அதோ தெரிகிறதே! அதுதான் பரணோ? வள்ளி நாயகியை இப்போது காணவில்லையே! பரணின் குடிலுக்குள் புகுந்து கொண்டாளோ? இதுதான் தினையோ? (ஒரு கதிரை ஒடித்துப் பார்க்கிறான்.)

இதில் ஒரு சுவையும் இல்லையே! வள்ளி இந்தத் தானியத்தையா காத்து நிற்கிறாள்? இந்தப் பைத்தியக்கார வேடுவர்களுக்கு அறிவே இல்லையோ? இந்த அற்பமான பொருளுக்கு அந்த அற்புதமான அழகியையா காவல் வைப்பது? சிற்றின்பத்துக்காகவும் இந்திரியங்களின் திருப்திக்காகவும் அருமையான மனிதப் பிறவியை வீணாக்கும் மக்களைப்போலவா வள்ளியைக் காவல் வைப்பது?

அதோ, அதோ! ஆ! என்ன எழில்! எனன எழில்!

(மயங்கி நிற்கிறான். தினைப்புனத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறான். அவள் முன்னழகையும் பின்னழகையும் பார்த்துப் பார்த்து இன்புறுகிறான். மெல்லப் பரணை அணுகப்பார்க்கிறான்)

இவ்வாறு நாடகமாடும் நம்பியாகிய முருகன் நம்மைப் போலத் தியங்கி மயங்கித் திரிந்தவனா? தன் அருளை வள்ளி நாயகிக்கு வழங்க அருளினால் திரிந்து அவளை அணுகி நலம்

புகழாக்கும் மெய்யதனைப போற்றுகின்றோர், என்றும்
இகழார்கள் ஏவரையும்; என்றுமுயர் கின்றாரே.

செய்தான். பரமகருணையிலும் பெரிய கருணை அது. சுனை யைத் தேடித் திரிந்தான்; அருவியை நாடித் திரிந்தான்; தினைப்புனத்தைக் கண்டு சுற்றிச சுற்றி வந்தான்; பரணைச் சுற்றித் திரிந்தான். வள்ளிநாயகி இனியும் அலைந்து திரியாமல் தன்னோடு ஒன்றி வாழவேண்டும் என்ற எண்ணத்தால் அவன் திரிந்தான். நோய்வாய்ப்பட்ட குழந்தை மருத்துவரை நாடி நடந்து செல்லாது என்று இரங்கி, அதற்காகத் தான் நடந்து சென்று நலம் செய்யும் தாயைப்போல் ஆண்டவன் திரிந்தான். இந்தக் கருணையை எண்ணுகிறார் அருணகிரியார்.

சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதணோ டுதிரிந் தவனே!

[இதண் - பரண்.]

'இப்படித் திரிந்து, ஆன்மாக்கள் பிறவியலை யாற்றில் திரிந்து உழலாமல் இருந்தபடியே வீடு அடையும்படி தடுத்தாட் கொள்ளும் எம்பெருமானே! உன்னுடைய திருக்கையில் உள்ள வேலை மறவாமல் தியானிக்கும் என்னைத் திரியும்படி விட்டுவிடலாமா? சம்சார பந்தத்தில் அகப்பட்டுக் கலங்கி உள்ளமும் உடலும் தியங்கி மயங்கித் திரியும்படி செய்து விட்டாயே! இது நியாயமா!' என்று கேட்கிறார் அருண கிரியார்.

வினைஓ டவிடும் கதிர்வேல் மறவேன்;
மனையோ டுதியங் கிமயங் கிடவோ!
சுனையோடு அருவித் துறையோ டுபசுந்
தினையோடு இதணோ டுதிரிந் தவனே!

இது கந்தர் அநுபூதியில் 40-வது பாடல்.

பழுது படுத்தும் பழிவழியைப் பாராமல்,
முழுதும் தமையுயர்த்தும் மோனநெறி கொள்ளீரே.

கடன்காரர்கள்.

[ரஸபதி]

பல்வளம் நிறைந்தது பாண்டி நாடு. அதன் திலகம் போல்வது சதுரகிரி. அழுகணி, இருப்பவல், உதிரவேங்கை, உரோம வேஙகை, உரோம தரு, ஏறழிஞ்சல், ஐந்தரு, கஊண எருமை, கருநொசசி, கருநெல்லி, கருங்கொடிவேலி, கரு நாரத்தை, கல்தாமரை, கானலபலா, குருவரிக் கற்றுழை, கையாந்தகரை, சஞ்ஜீவி, சாயா விருட்சம், சிவப்பிலேககள்ளி, சுணஙகதரு, செஙகற்றுழை, செங்கடுக்காய், செஙகொடிவேலி, செந்நாயுருவி, சேஙதாடு பாவை, சோதி விருட்சம், சோதிப் புல், திலஷேசசெடி, தொழுகணி, நாகதாளி, நாகபடக் கற்றுழை, பவளத துத்தி, பேய்ச்சுரை, பொற்றலேக் கரிப்பான, மஞ்சப பூததை வேஊ, முண்டக தரு, முபபிரண்டை, வனப பிரம்பை, வெணணுவல், வெள்ஊப் புனல், முருங்கை முதலிய எஙகும கிடைததற்கு அரிய காயகற்ப மூலிகைகள், இம்மஷேயில் ஏராளமாக இருககினறன.

காசு புணம் செலவில்லாமல், எவரையும் காப்பாற்ற இயற்கை தந்த இவைகஊ, மறநதுவிட்டது மானுடம்.

இம் மஷேயின் ஒரு பகுதிககு, உரோமசர் வனம் என்று பெயர். இஙகு மாலினி எனும் ஒரு மாதவர், சிததர்கள் வரிசை யில, சிறக்கச சாதஊ செய்கிறூர். அவர் துஊணவி, தூய்மை யும் வாய்மையும் துஊணயெனறு இருபபவள். மஙகை அவள் பெயர் மாதேவி. அவளுடன முனிவர், நல்லற இல்லறத்தை நடத்தினர். அதன பயனுக, பிளஊகள் இருவர், ஏககாலத்தில் பிறந்தனர். வளர்பிறைபோல் இருவரும் வளர்ந்தனர். இப்போது அவர்கட்கு வயது இரணடு.

சீராளர், நல்ல செயலாளா, மெய்ம்மையருப்
பேரரளர் தோன்றப், பெருந்தவங்கள் செய்வோமே,

ஒருநாள் மாதேவி, பாலர் இருவர்க்கும் பாலூட்டினள். இரு சிறு பாய்களை விரித்தாள். அவைகளில் பிள்ளைகளை இட்டாள். பக்கத்தில் தானும் படுத்தாள்.

பாலர்கள் இருவரும், ஒருவரை யொருவர் பார்த்தனர். சிறுவாய் திறந்து சிரித்தனர். கை கால்களை அசைத்தனர். பற்றுவார்போல், ஆ—ஈ—ஊ—ஏ—ஓ என்று சிறிதும் பெரிதுமான குரலெடுத்துக் கூவினர். குழந்தைகள் படுத்த நிலையில் குதிப்பதையும், குதலை மொழிகளால் கூவுவதையும் பார்த்து, குதூகலித்தாள் அன்னை. மாதவ மாலினி, குறிப்பாகப் பிள்ளைகளைக் கூர்ந்து நோக்கினர்.

அப்படியா செய்தி! இப்போதுதான் விவரம் அறிகிறேன் என்று துள்ளி எழுநதார்.

அதிர்கிறது கணவர் குரல். அதையுணர்ந்து விதிர் விதித்தது உடல். மனைவி எழுநதாள்.

ஸ்வாமி! என்ன இது! ஏன இப்படிப் பயப்படுகிறீர்கள்?

மாதேவீ! மானுட மனம், இடையிடை பழமையை மறந்து விடுகிறது. அதனுல் எவ்வளவு தொல்லை விளைகிறது தெரியுமா?

என்ன சொல்கிறீர்கள்? ஒன்றுமே விளஙகவில்லையே! என்ன நேர்ந்தது? மறைகக வேண்டாம்; தயவுசெய்து சொல்லுங்கள் என்று தடுமாறுகிருள் அததையல்.

மாதர் திலகமே! சொல்கிறேன்; முதலில் உன் மனத்தைத் திடப்படுதகிக் கொள்! அறியாமைக்கு இடம் தராதே! படுத்து விளையாடும் பாலர்களால், நமது முனஜெனமம் முன் வந்து நிற்பதுபோல் தெரிகிறது.

நான முனபிறப்பில ஒரு வர்த்தகன. நீ எனது துணைவி. ஒரு வாணியர் இடத்தில், வழக்கப்படி, பத்துககுடம் எண்

உப்பறியாப பணடஙகள் குப்பையுறும் என்பதுபோல்,
தப்பறியார் நட்பிலதேல், தான்வீழ்தல் நிச்சயமே.

ணெய் வாங்கினேன். இரண்டொரு நாளில் பணம் தருவதாகச் சொன்னேன். உடன்பட்டுச் சென்ருர் அவர். இதனில் பிழையில்லை; வர்த்தக உலகத்தின் வழக்கம்.

அன்று இரவு மணி எட்டு. படபடத்தது மார்பு. என்ன இது என்று படுத்தேன். அவ்வளவுதான். இயற்கைத் தீர்ப்பின்படி இறந்தேன்.

என்போன்ற வர்த்தகர் ஒருவர். அவர் என்னிடம் ஆயிரம் பொன் கடனக வாங்கி யிருந்தார். திருப்பித் தந்திலர். மறந்தார். அவரும் இறந்தார்.

எண்ணெய் வாணிபர், பிள்ளையாய் வந்து பிறக்கிருர். என்னிடம் கடன்வாங்கிய வணிகரும், பக்கத்தில் பிள்ளையாய் வந்து படுத்திருக்கிருர். ஒருவர் கொள்ள வந்தவர்; மற்றவர் கொடுக்க வந்தவர். பேச அறியாத பிள்ளைப பிராயத்தில், முன்னைய பிறப்பின் நினைவு முகிழ்க்கும். பொருளறியா மழலை மொழியில், இவர்கள் பூர்வோத்தரம் குறித்துப் பேசுகிருர்கள.

ஸ்வாமீ! உண்மையாகவா சொலகிறீர்கள்?

மாதேவீ! பாழும் பொய் சொல்லி எனக்குப் பழக்கம் இல்லை. நான் பிறந்தேன். நீ பிறந்தாய். பிள்ளைகளாய் இவர்களும் பிறந்தனர். உள்ளதை உரைபபதாலுல், எல்லாம் கடன்பட்ட கதைதான. கடன்காரக் கூட்டந்தான். ஆரம்பத்திலேயே இதை அறிநதேன். இடைபபட்ட வாழ்க்கையில மறநதேன். தம் மழலை மொழிகளால, இவர்கள் அவைகளை மனங்கொள வைத்தனர். நினைக்கிறேன். வாய் நிரம்பச் சிரிப்புத்தான் வருகிறது என்று நகைததார் மாலினி.

அவைகளைக் கேட்ட மாதேவியின் மனம் அதிர்ந்தது.

பிராணபதீ' பிள்ளைகள் இருவரும் பெரியவர் ஆவர். அவர்கள் கடனும், நம் கடனும் அடைக்கப்படும்; அதன்பிறகு என்ன ஆகும்?

உள்ளம் திருந்தி, உரைதிருந்தி வாழ்வாரை,
எள்ளாது ஞாலம்; நாமும் இறைஞ்சுவமே.

என்ன ஆவது? நம் கடன் தீர்ந்தால், நாம் இறப்பம். அவர்கள் கடன் அடைபட்டால் அவர்கள் மரணம் ஆய்விடு வர். இதுதானே சிருட்டியின் தத்துவம்.

கடனை அடைத்தவர் கண்மூடி விடுவதா? அப்படியா செய்தி! என்று, ஒன்றும் சொல்லத் தோன்றாமல் கலகல கண் ணீர் சிந்தினள் அக் காரிகை.

பைத்தியக்காரி! இறந்தவனைச் சுமந்தவனும், ஒருநாள் இறந்து போவதை அறியாயா? சாட்சி மாத்திரமாய், பரந்த உலகத்தைப் பார்! பாசம் மிகுந்து பல்லிளிக்காமல, இறப்பு பிறப்பிற்கு இடமளிக்காமல, உயிரை இறைவனபால ஒப்ப டைப்பதுதான உத்தம தருமம். அதைத்தானே அன்றும் இன்றும் ஆஸ்திக உலகம் அறிவிக்கின்றது. தெளிந்தவர் உய்ந்தனர். இத தெளிவிலாதவர், இறந்தும் பிறந்தும் வேதனை எய்துவர். தெரிகிறதா?

ஸ்வாமி! தாங்கள் ஆணமகர். மேலும் அருந்தவர். அருள்நூற்களை ஆய்ந்து தெளிந்தவர். உங்கள் நிலையில் இருப்பவர்கள், எபபற்றும் இல்லாமல் இருக்கலாம். நான் பெணபால், பேதை என்னும் பெயரைப் பெற்றவள். சிருஷ்டி ரகஸ்யத்தைத் தாஙகள் எவ்வளவு சிறப்பாகச் சொன்னாலும், எளிய என இதயம் அதை ஏற்கவில்லையே! பெற்ற வயிறு துடிக்கிறதே! பேதை என் உடல் கொதிக்கிறதே! நான உயிரொடு இருக்கும்வரை, என மக்கள ஆயுளொடு இருக்க, ஏதேனும் வழிசெய்ய இயலாதா? விதியை மதியால வெல்லலாம் எனகிறீர்களே! இரக்கம் காட்டுங்கள் என்று, புழுவாய்த துடித்தாள் அப்புண்ணியவதி.

* * * *

மாதவர், அண்மையில் இருந்த ஒரு சீடரை அழைத்தார். பத்துக் குடம் நல்லெண்ணெய் வாங்கிவா! ஓடு சீக்கிரம் என்

வஞ்ச மனத்தை வழுவா வணம்திருத்தி,
கொஞ்சும் கலையுறவில் கூட்டுவித்தல் செய்வோமே.

ளூர். அவர் கட்டளைப்படி, அரைமணி நேரத்தில், அவனும் கொண்டுவந்து அவைகளைக் கொடுத்தான்.

அருந்தவர், அரியபெரிய ஒரு கல்விளக்கை அமைத்தார். வேண்டிய அளவு, அதனில் எண்ணெயை இட்டார். பெரியதாகத் திரி செய்தார். எரியுமாறு தீபத்தை ஏற்றினூர்.

பாலருள் ஒருவனை, அவ்வொளியில் படுக்க வைத்தார். கொழுந்து விட்டு எரிந்த விளக்கு, எங்கும் பிரகாசத்தை எழுப்பியது.

மாதேவி! குடங்களில் உள்ள எண்ணெயை, சிறுகச் சிறுக வார்த்து வா! பளிசசிடும் தீபம் அணையாதபடி பார்த்துக் கொள்! பத்துக் குடம் எண்ணெய்க் கடனை, தன் கையால் வாங்கிக் கொள்ளும்வரை, இவனுக்கு ஆயுள் இருக்கும். அக்கடனை திருப்பி அவனிடமே அளிக்க மாட்டோம். விளக்கொளி இவன்மேல் விளங்கும். இவனுக்காக இத்தீபம் இருக்கிறது. அவ்வளவுதான். விதியை வெலல, நீ சொன்னபடி மதியால் முயலும் மரபு இது. வெற்றி விதிக்கா, அல்லது நமது மதிக்கா என்பதைச் சோதிப்பம் என்று சொன்னபின், மாதவர், அரிய தியானத்தில் ஆழ்ந்தார்.

காரிகை, மங்கல விளக்கைக் கண்காணித்தாள். வற்றும் நேரமெல்லாம் எண்ணெயை வார்த்தாள். இம் முயற்சி சில காலம் இருந்தது. குடத்தில வரவர எண்ணெய் குறைந்தது. இறுதியில், ஒருதுளி எண்ணெயும் இல்லை.

இதன்மேல் எப்படி நடந்து கொள்வது தெரியவில்லையே! தியானத்தில் ஆழ்ந்த கணவரை, எப்படி எழுப்புவது? திகைத்தது மனம். எண்ணெய் இல்லை. திரி பற்றி எரிகிறது. பதைத்தது உடல். பட படத்தது மனம். விரைந்தோடி வந்தாள்.

முன்னும் பின்னும் எண்ணும் முதறிஞர் வாய்மைகளைப்,
பின்னி நமதுணர்வில் பேசவைப்பம் வாரீரே.

ஸ்வாமி! ஸ்வாமி!! எண்ணெய் தீர்ந்தது; திரியே தீய்ந்து விடும்போல் இருக்கிறதே! இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்று, கணவர்மேல் விழுந்து கதறினள்.

கடுந்தவ முனிவர் கண்விழித்தார். விவரம் அறிந்தார். விரைந்து எழுந்தார். அந்த விளக்கை அணுகினர். புகைந்த தீபம், பொட்டெனறு அவிந்தது புரண்டது பிள்ளை. தாய் வாரி எடுத்தாள். மார்போடு அணைத்தாள். தொங்கியது தலை. பறந்தது உயிர். பெற்ற வயிறு பற்றி எரிந்தது.

ஐயோ மகனே ! என்று அலறிய அவள் அலறல், காடு முழுதும் எதிரொலித்தது. கல்லான முனிவர் மனமும் கரைந்தது.

மாதேவீ! சனன மரண ரகஸ்யமே ஒரு தனியானது. அதை அறிந்தவரும் மறந்தனர். அறியாதவர் கதி அதோகதி.

நீயும் நானும், முன்னைய பிறப்பை முதலில் மறந்தோம். அடுத்து வரும் பிறப்பையும் அறிய மாட்டோம். இயற்கையை எதிர்க்க எவராலும் ஆகாது. ஏமாந்து போகாதே! சிவ சிவ என்று சிந்தனை செய்! இடைப்பட்ட வாழ்க்கையில், யாது நேரினும், ஊழ் நடை இது என உணர்ந்து கொள் என்று, மங்கை அவளின் மனம் தேற, ஆயிரம் ஆயிரம் ஆறுதல் செய்தார். சேய்க்குரிய செய்கடனை, இருவருமே சேர்ந்து செய்தனர்.

*　　*　　*

ஸ்வாமி! வாணியனுகிய குழந்தை, கடன் வாங்கிக் கொண்டு சென்றது, நமக்குக் கொடுக்க வேண்டியவன் இவன். இவனேனும், இருந்து நமக்கு இன்ப நலம் செய்வானு என்று, விநயமொடு மாதேவி வினவினள். மங்கையர் திலகமே! ஐந்து வயது ஆனதும், இவனைக் குருகுலத்தில் சேர்த்து விடு! கற்பன கற்று காளைப் பருவத்தில் திரும்புவன். அதன்பின, பொருள் தேடு முயற்சியில் அவன் புகுவது இயற்கை. கொணடு வந்து அவன ஏதேனும் கொடுத்தால் மட்டும் வாங்காதே! ஏமாந்து போகாதே! என்று எச்சரித்தார். அதன்பின, இயல்பான தியானத்தில் இருந்தார்.

எறும்பின சுறுசுறுப்பை எண்ணி, மனத்தின்
குறும்பகற்றி, அவ்வழியே கோபதியைக் கூடுவமே.

இமையவர் இறப்பது இல்லை; அவர்கள் பெயர் இட்டு அழைத்தால், ஆயுள பிள்ளைகளுக்கு அதிகரிக்கும் என்று, எண்ணியது அவள் புண்ணிய மனம். அது கருதியே பிள்ளைக்குத் தேவநாதன என்று பெயரிட்டாள். வன தேவதைகளை எல்லாம் வழிபட்டாள். ஐந்து வயது பிறந்தது. சிறந்த ஒரு குரு குலத்தில், பிள்ளையைச சேர்த்தாள். அருந்தவ முனிவர், அங்கிருந்த ஆசிரியர். அவரது நோக்கம், மகனுக்குக் காப்பாகும் என்று கருதியது மனம். அதனுல் அன்னை, கவலையற்று இருந்தாள்.

தேவநாதன், அருள் நூற்கள் பலவற்றை அறிந்து தெளிந்தான். ஏதம் இலாத மேதை என்ற பேரும் புகழும் பெருக வளர்ந்தான. பாலனுக்கு இப்போது வயது பதினுறு. ஆசி செய்து அனுப்பினர் ஆசிரியர். ஆஸ்ரமத்திற்கு வந்தான். தாயைப் பணிந்தான். தந்தையைத் தொழுதான். பெற்றவர் மகிழ்ச்சி பெருகினர்.

தேவநாதன, மருத்துவக் கலையிலும் வல்லவன். அதனுல், சதுரகிரியில் உள்ள மூலிகைகளின ரகசியங்களை எல்லாம் முறையே ஆய்ந்தான. அதன வழியே இரசவாதம், சிறந்த முறையில் சித்தித்தது. ஏராளமான தங்கத்தை எழுப்பினுன். கட்டி கட்டியாகத் தங்கத்தை உருட்டினுன். கனிவுடைய தாயிடம், அவைகளைக் கொண்டு வந்து காட்டினுன்.

கணவர் சொன்னது நினைவில் எழுந்தது. அதிர்ந்தது இதயம்.

தேவநாதா! அப்பா! என்று உடல் பதற, உதடு துடிக்க, ஏதோ சொல்ல நினைத்தாள் அன்னை.

என்ன அம்மா! தங்கள் உடல் ஏன் இப்படித் தள்ளாடுகிறது என்ருன் மகன.

உன மதிநலம் கண்ட மகிழ்ச்சியால், சொற்கள் குழறின; வேறு ஒன்றும் இல்லை என்று, சாதுரியம் தோன்றச் சொல்லிச் சமாளித்தாள் தாய்.

தேவநாதா! உன் உழைப்பில் உருவான இவைகளை, நீயே சேமம் செய்து வை! வேண்டிய போது பயன்படுத்திக்

ஆவா சிவமே! அரசே அருள்புரிய
வாவா என்று, வழுத்துவது நம்கடனே!

கொள்ளலாம் என்று, நகைமுகம் காட்டினள்; ஆயினும் அவள் இதயம் அழுதது.

மறுத்திலன் மகன். சிறப்பாகத் தாய் சொன்னபடியே, அவைகளை, காப்பான இடத்தில் சேமித்தான்.

இவ்வளவு செய்திகள் நிகழ்ந்தும், எதையும் அறியார் மாதவர். வெளி முகமாகுல் வேதனை. அவரோ, அகமுக மாகி, ஆநந்தரா யிருக்கிறார்.

ஒருநாள் தேவநாதன், எண்ணிய அளவு பொற் கட்டியை எடுத்தான். உருக்கினான். அடித்துத் தகடு ஆக்கினான். அதை மடக்கி ஒடுக்கினான். அரிய வேலைப்பாடு அமைந்த ஒரு தங்கக் கிண்ணத்தை உருவாக்கினான். கொண்டு வந்தான்.

அம்மா! இதைப் பார்த்தீர்களா என்றான். அதன் பள பளப்பும், மகத்தான வேலைப்பாடும் கண்டு வியந்தாள். கை நீட்டி வாங்கினாள்.

என்ன இது! தலை சுற்றுகிறது; கண்ணிருள்கிறதே என்றபடி, தடார் என்று தரையில் விழுந்தான் தநயன.

திடுக்கிட்டாள் அன்னை. விதிர்த்தது உடல். கிண்ணத்தை வீசி எறிந்தாள். என்னடா இது! என்று கூவியபடி, படுத்த மகனை எடுத்தாள். சிறந்த தேகம் சில்லிட்டது. துடித்தாள், பதைத்தாள். விதியா! இது மதி செய்த சதியா! என்று, ஆறுபோல கண்ணீர் பெருக்கி அலறி யழுதாள் மாதேவி. அந்த அதிர்ச்சியில, கடுந்தவ முனிவர் கண் திறந்தார். விவரம் உணர்ந்தார். விரைந்து எழுந்தார்.

ஏந்திழையே! எச்சரித்து வைத்தேன்; அப்படியும் ஏமாந்து போயினை. உன்மேல் பிழையில்லை; விதிசெய்யும் விபரீத விளையாடல்களுள் இது ஒன்று. இனி அழுது பயனில்லை। அமைதி கொள்! இறைவனை நினை! என்று, தெளிவுரை பல கூறித் தேற்றினார். இறந்தானுக்கு உரிய இறுதிக் கடனையும் நிறைவேற்றினார்.

மாதேவீ! இந்த இரு அனுபவத்தி லிருந்து, ஒவ்வொரு வரும், ஒவ்வொரு வகையில் கடன்காரர்கள். பெருகிய

உயர்சாதி மூங்கிலில் முத்துதிகழும்; மெய்ம்மை
நயம்நிறையும் சீலரிடம் ஞானம் உதிக்குமரோ.

கடனைத் தீர்க்கவே பிறக்கிறார்கள் ; தீர்ந்ததும் இறக்கிறார்கள். இந்த உலகில் எதனில் இச்சை வைத்தாலும், அதை அனுப விக்கத், தொடரும் பிறப்பு தொல்லை தரும். ஒட்டு பற்று இல்லாமல், தண்ணீரில் தாமரைபோல் இருப்பதுதான் தருமம்.

கடனை அடைக்க, லௌகிகம் கைகொடுக்கின்றது. ஈஷணைத் திரவிய இச்சையால், படபடத்து, மேலும் கடன்படா மல், கடவுள் திருவடிகளைக் கருதுவதுதான் நலம். அன்பைப் பெருக்கி, அதை ஏற்க வைத்து, கடவுள் பெருமானைக் கடன் காரன் ஆக்குவம். அதன் பயனாக, இனிப் பிறக்க இடம் இல்லை. ஏற்பன் பெருமான். அன்பிற்கு ஈடாக அருளை வழங்கி, இன்பத் தன் ஒளியில் உயிரை இணைப்பன. இந்த தேவ ரகஸ்யத்தைத் தெரிந்து கொள்ளாமல், குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவார்போல, குமைந்து குலைகிறது குவலயம்.

இருள் தேகம், மருள் ஆக்கை, சுத்த உடல், பிரணவ உரு, ஞான மேனி என்று, இயல்பான ஐந்து உடல்கள் நமக்குள.

(1) இருள் தேகம் :—அபானத்தில் மலக்குற்றம், நாவில் நாடி தோஷம், கண்டத்தில் கப விஷம், மேல் மூலத்தில் திரை நிலை, மனத்தில் ஆணவத் தடிப்பு முதலியன, அஞ்ஞானத் தையே பெரிதும் அளிக்கும்.

(2) மருள் ஆக்கை :— மாயையில் மயங்கி, அடுத்து வருபவை இவை என்று அறிய ஒட்டாமல், பேதலித்த அகங் காரத்தையே பெருக்கும்

(3) சுத்த உடல் :—கருவி கரணாதிகள் ஓய்ந்து, வித்தக அறிவு விளங்கி, பார்க்கப்படு பொருள் யாவும அருள்வடிவு என்று அறிவிக்கும்.

(4) பிரணவ உரு :—உருவம் உண்டு ; விளங்கும் உருவ நிழல், நிலத்தில் விழா நிலையை விளைவிக்கும்.

(5) ஞானமேனி :—கண்கட்குக் காட்சி யாகாமல், அறி விற்கு மட்டும் விளங்கும் அனுபவத்தைச் செய்யும்.

கடவுள் பெருமானைக் கருத்தில் இருத்தி வழிபட்டால், பாம்பு தோலுரிப்பதுபோல், ஒவ்வொரு தேகமும் முறையே ஒழியும். பிராரத்துவ கடனும் அடைபடும ; ஆகாமிய கடனோ,

ஒழுக்கம் அடிப்படையா உறற்பினா, கலவி;
விழுப்பம், இதன்பின் விளையுமிதை ஓரீரோ?

அரும்புவது இல்லை. இச்சாதனை செய்ய, இடையில் மெலிவு விளையாதபடி, புனித காயகற்பங்களைப் புசிப்பது முறை.

ஏறழிஞ்சில் என்று ஒரு மரம். அதன இலை, மஞ்சணத்தி இலைபோல இருக்கும். விதை, தேற்றங் கொட்டை போல்வது. உத்தம அவ்விதையை, நல்லெண்ணெயில் ஊறவை! பிறகு எடுத்து, குளித்தைலம் இறக்கி, செந்தாமரைக் கொடியில் நாரெடுத்துத் திரியாக்கி, தைலத்தில் அத்திரியை யிட்டுத் தீபம் ஏற்று! விளக்கு முழுவதும் மை படியும். அந்த மையை திலதம் ஆக நெற்றியில வை! தூரத்தில் காணும் பொருள்கள் யாவும் கணகட்குத் தெரியும்; உன உருவைப பிறர் உணர முடியாது. உலகத் தொடர்பு இதனால் ஒழியும்.

செங்கொடி வேலிக்குப பக்கத்தில, கருங்கொடி வேலி. அது, நொச்சி யிலைபோல இருக்கும பிரியமொடு அந்த இலையைப பிடுங்கி வந்து, கசக்கிச சாறு பிழிந்து, சமைத்த சோற்றில ஒரு பிடி அளவு எடுத்து, மேற்சொன்ன சாற்றில் மூன்று துளியிட்டு, மூனறு நாள் உண்டால், காயம் வஜ்ர காயம ஆகும. தெரிகிறதா! இத்தகைய முயற்சியில் இருப்பது நலம்.

"ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக் கோனே! நம்
காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே!"

என்று, கருத்தொடு கூறுவா சித்தர்கள். காரீயத்தைச் செந்தூரமாக்கி, உடல் உரம் பெற உண்ணலாம்; இப்படிப் பல முறைகள இருக்கின்றன. இயன்றவர்கள் முயலலாம்; இயலாதவர்கள் இவைகளை அறிந்து வைத்தால், எண்ணிய எண்ணியாங்கு எய்தும் என்று திருவள்ளுவா தெரிவித்தபடி, இத்தொடர்பு அடுத்த பிறப்பிலேனும் அமையும் என்றுதான், இவைகளை எழுதி வைத்துளர் மேலோர் என்று, விரிவாக மாதேவிக்கு மாலினி முனிவர் விளக்கினா.

குருசீடக் கிரமத்தில் இப்படி விசாரணை செய்து, இன்ப அனுபவம் பெற முயல்வதுதான இல்லறம். இதற்கு மாறானவை, மிருக மரபு என்றும் எண்ணியுளர், பொன்னன அந்தப் புண்ணியர்கள்!

வாழ்க சித்தர்கள் வழிமுறை!

ஓம்.

GREATNESS

There is nothing great or small except what the human mind conceives it to be. In the world of devotion, there is only one who is great and that is God. Great is His power and great is His mercy. His greatness is visible in His qualities. Nowhere perhaps are His divine qualities more fully or adequately described than in the Gita in Sri Krishna's words. Even there the description is but an attempt. The divine qualities are beyond description. One can point out to some great qualities, but can only end with saying that words of description fail as a measure of the greatness of the divine qualities

Man, by his inscrutable power of mind and assimilation, can make his own as much of the divine qualities as his capacity allows. The constant thought of god as the all pervading entity of goodness and power, will make his life a living expression of divine qualities. God lives in the heart of every being. It is up to us to make Him manifest who is only immanent. The miser who has untold riches is only an immanent rich man. His riches are of no use to him or the world. The great man who holds his riches for the good and the suffering, is the manifest rich man of divine qualities. Even so, the man who, in constant thought of God, brings into manifestation the divine qualities of love, service and grace in his daily conduct, imbues himself with the greatness of God in proportion to the success of his endeavour. In several places, posts and

positions, that are regarded as being great or high, you find men who are small, of little stature, as little as the circumscribed limits of their own selfish satisfaction arising from power or pelf. In positions, which in a worldly way. may be regarded as low or humble, you find men who are as great as the universe, for they have within, the boundless limits of their over-flowing love immersed in the entire creation. Association leads to integration. Constant thought and meditation of the Lord will fill the mind of man with His divine qualities. God's greatness is a part of Himself. He dwells in every heart in His immanence. Immanently all is hence great. But the great man is he who makes his being the manifest abode of divinity. Devotion, love, humility, sacrifice, service, self-knowledge—these alone will lead life to sovereign greatness.

(4—9) —*Thiruppugal Mani.*

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருட சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தா செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

“ முன்னைஎன வினையி னாலே, மூர்த்தியை நினைய மாட்டேன்;
பின்னைநான் பித்த னாகிப், பிதற்றுவன் பேதையேன் நான,
என்னுளே மன்னி நின்ற சீர்மையது ஆயி னானை,
என்னுளே நினைய மாட்டேன், என்செய்வான் தோன்றி
னேனே ”

—(தேவாரம்)

No. 1506
ASOKA
No. 1506

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பிளுயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து வருகிற விசுவாவசு வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65 Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami 8 ... Street Madras-1